ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அரிநாமசங்கீர்த்தனை.

காஞ்சீபுரத்துக்கடுத்த குத்தனூர்

சின்னசாமி சாஸ்திரி அவர்களால்

இயற்றப்பட்டது.

சென்னைப் புரசை

பு. அ. வேங்கடேச நாயகர் அவர்களது

"மாறன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1926

புத்தக விளம்பரம்.

வண்ணத் திரட்டு.

இதில் பல வித்துவான்களால் இயற்றப்பட்ட வண்ணங்களும் தண்டபாணி சுவாமிகள் என்னும் (புலவர் புராணம்பாடிய) முருகதாசர் இயற்றிய வண்ணமும், சென்னைப் பச்சையப்பன் உயர்தரப்பாடசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் இயற்றிய வண்ணமும் வசன நடையில் எழுதிய வண்ணப்பாவின் இலக்கணமும் சேர்க்கப் பட்டிருப்பதோடு வண்ணப்பாவின் இலக்கணத்தைக் கூறும் பண்டைய சூத்திரமும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இதன் விலை அணு 8.

அஷ்டபிரபந்தம்.

இதில் துறைவிளக்கமும், இலக்கண விதியும் அரும்பத உரையும், திருநரையூர்நம்பி மேகவிடுதூதும் திருத்தலமகிமையும் திருத்தலங்களுக்குத் திருநாமம் வந்த காரணங்களும் புதியதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1

சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள்
இயற்றிய,

"மாறன்" பஞ்சரத்தினம். விலை பை 6.

சிவ விஷ்ணு க்ஷேத்திர விளக்கம்.	0	12	0
நாலாயிர திவ்விய பிரபந்தத் திரட்டு.	0	8	0

பு. அ. வேங்கடேச நாயகர்
"மாறன்" அச்சுக்கூடம், புரசை, சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அரிநாமசங்கீர்த்தனம்.

நூன்முகம்.

ஸ்ரீபாஷியகார்துதி.

க-இராகம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

எம்பெருமானார் திருவடிகளேசரணம் - என்றென்று மடைந்தவர்
இருமிதியடியடியேன் முடிக்காபரணம்.

அநுபல்லவி.

நம்பெருமாளடி நம்பியபாத்திய
நாருக்கேவீடென்ற நற்குருசாற்றிய
செம்பெருமறைகடந் தும்பரும்போற்றிய
திருமந்திரத்தைக்கோபுர மேறித்தூற்றிய எம்

சரணங்கள்.

மாசூரிகளும்பணியும்பெருமானே மகிதலமீடேறத்
தேசுலாவுஞ் சகஸ்திரமுடியோனே ஜகதாசாரியனாய்க்
காசினியிலவதரிப்பா யெனத்தானே கருணாசாகரனாய்
மாசில்லாமதி திருவனந்தாழ்வானே
ஆசூரிகேசவ சோமயாஜிமோதித்த
பாசராங்கதனாய்வந்து சோதித்த
சாசுவதசன்மயகீதையைபோதித்த
வாசுதேவனேபரனென்றுசாதித்த . எம்

மாயாவாதிகள் மதமாகியகிணற்றில் மூழ்கியபிரமம்
சாயாமற்பாணியைப்பிடித்தந்தக்ஷணத்தில் தூக்கிக்கரையேற்றும்
காயாவென்று-சாதுக்களனைவருங்குணத்தில் ஈடுபட்டாசை
ஓயாமலநுபவிக்கு மதிகசணத்தில்

வாயாடவாதிக ளொர்க்குமொருவழியும்
தேயாமலோடச்செய்து தொண்டர்கள்மனமொழியும்
பேயாயலைந்திடாமற் பெருமானை விட்டிழியும்
ஆயாசமுமில்லர்ம லாதத்தருள்பொழியும் எம்

திருவேங்கடத்தானுக்குந் திருச்சங்கு திருவாழியளித்த
குருவாய்முனிகுலமெல்லாமங்கங்கு கொண்டாளிக்களிக்கும்
பெருமைபூண்டதனுவிவர்க்கிடெங்கு நாடிப்பார்த்தாலும்
ஒருவருமிலையிவர்பதமெனபங்கு
இருநிதியுமிந்திரபோகமும் காளகண்ட
பிரமாதிகளதிகாரமும் வைகுண்ட
சரணரேணுசம்மாகவேணுந் தொண்ட
வருக்கடிமைச்சின்னசாமிகண்டுகொண்ட எம்

உ-இராகம்-சஹாணு-ஆதிதாளம்.

பல்லவி.

உடையவரையடையா-மானவரே
மடையரிலுங்கடை யானவரே

அநுபல்லவி.

தடையில்லாமலையனுடையபாதப்பணி
விடைபெற்றசுமித்திரைபடைத்தவராகிய உடை

சரணங்கள்.

வேதங்களையும்பரிசோதனை செய்குலகில்
வாதங்கள்புரிந்தெங்கள் மாதவபரத்துவ
சாதனைசெய்துபர மாதரவாயெவர்க்கும்
ஈதறிவித்துப்பெரும்பூதபுரியில்வாழும் உடை

பண்டிதாயனையுந் துண்டம்புரிந்திந்திர
கண்டகனையும்ஜெயித் தண்டரையாண்டிந்த
மண்டலமிசைப்பாஷண்டரை வென்றுஜெயங்
கொண்டருளாலிப்போது தொண்டரையாண்டிடும் உடை

அன்னவாகனனும் பன்னகபூஷணமும்
பொன்னுலகதிபனு மின்னமுள்ளசுரரும்
மன்னுமாதவர்களும் சின்னசாமிதாஸனும்
பன்னுந்துதிக்குப் பிரசன்னராயிருக்கும் உடை

ந-இராகம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

விசிஷ்டாத்துவித மதமேமதம்
விஷ்ணுபதமே சாசுவதபதம்

அநுபல்லவி.

வசிஷ்டாதி முனிவருங்கண்டு தேரும்
மகிமையறிந்த மகத்துக்கள்கோரும் விசி

சரணங்கள்.

இதரமதத்திலிருக்கும்பேர்களிந்தமதத்தைத்தேடும்
ஏற்றமுள்ளதாயிருப்பதனாலுமிமையவர்புகழ்பாடும்
சதமகன்சதுர்முகன்பஞ்சமுகன்சண்முகாதிசுராரோடும்
சகலமுனிவர்களுமன்பர்களுஞ்சத்தியமிதென்றுநித்தியம்
கொண்டாடும் விசி

சேஷத்துவபாரதந்திரியத்தாலிந்தச்சீவசத்துருக்கள்சாகும்
சிருரச்சின்மபஞானலமிஞ்சிச்சிறும்போதுபந்தம்வேகும்
சிஷத்வங்குருத்வஞ்செம்மையாய்விளங்குந்தேகிக்குஜனனம்போகும்
தேகாந்தமுத்திவருமென்றுசாதுக்கள்
சித்தத்துக்கொத்தப்ரசித்தம்பெற்றதாகும் விசி

எந்தைமுகுந்தனேபிர்மமென்றுவேதமெல்லாமுறையிட்டியம்பும்
எழின்மொழிகளைப்பழித்துக்கொண்டழிந்தேதுந்தெரியாமல்வம்பும்
சிந்தைகொண்டுரைக்குஞ்சேதனருமிதைச்சேர்ந்துதேகாந்தப்பேரின்
சோட்டுமென்றெழுத்தோரெட்டுங்காட்டியசின்னசாமிதாசன் [பம்
திடமாகநம்பும் விசி

ஸ்ரீபராங்குசர்துதி.

ச-இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

சடாரியே சரணம் பவவண
குடாரியே சரணம்

அநுபல்லவி.

விடாமலடிக்கடி வெளியிலிழுக்குமிருள்
தொடாமலாநந்த சுகமுறவரமருள் சடாரி

குருவாய்வந்துசிவ கோடிகணிலேமன்னத்
திருவாய்மொழியெனுந் திவ்வியபிரபந்தஞ்சொன்ன சடாரி

ஈதிபதிவரவரவெதிமுதலோரும்பாடும்
அதிபதியென்றறிந்தனைவருங்கொண்டாடும் சடாரி

நெருக்குறுமயமதி நீங்கச்செய்யுஞ்செழுந்
திருக்குருகூரனென்று சின்னசாமிதொழும் சடாரி

தாயார் துதி.

ரு-இராகம்-ஆநந்தபைரவி-ஆதி.

பல்லவி.

தாயேநீயேயருள்புரிவாயே-ஜனகராசன்சேயே

அநுபல்லவி.

தூயோர்கோமள சுந்தரிகம்புகந்தரி
தோகையம்பிகையுந் தொழுங்கருணாகரி
ஆகையினாலுனக் காரம்மாசரி தாயே

சரணங்கள்.

வேதபூதநாதபுருகூத பிரகலாதநாரத
பாதராயணசுகசௌனக சுரபதிசுதவாநிரதவிரதபாரத
வாதநந்தனசனகசனந்தன
வசிஷ்டாதிவேதாநந்தவிசாரத
மாதபோதனர்கள் மனமிசையேகிய
பாதபத்மயுகதாரியாகிய தாயே

உன்றனெழில்மிகுந்தமந்தகடாட்சத்தாலே
வந்தபாக்கியமன்றோ விதிசிவ
வாசவாதிகளுக்கொருக்காலே
அந்தவாறுகந்தகருணை மைந்தனருகுமென்றன்மேலே
இந்தவேளைவாராதென்னமாயமோ
சந்ததஞ்சோதனைசெய்வதுஞாயமோ தாயே

மின்னலனுகூலத்தாலன்றோ மேகம்பொழியும் பிரவாகமாரி
நின்னருளுண்டானாலாகண்டல
நீலவண்ணனகிலாண்டதாரி

தன்னருள்கிடைக்கும் நிஜதாசகோடிகளுக்குபகாரி
வன்னமிகுங்கமலமலர்வாசனுக்கும்
சின்னசாமியெனுந் தாசனுக்கும் தாயே

நூற்பயன்.

ரு-இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

பஜனைபண்ணக்கூடாதா
பாதகமென்பதுபறக்கோடாதா

அநுபல்லவி.

அஜனரனிந்திரனாதிகளுக்குநாம
மந்தப்பதவிகளைத் தந்த தறிந்திராம பஜனை

சரணங்கள்.

தீராதபிணியுமகன்று-செல்வமிகும்வகைசெய்வதுநன்று
ஓராறிமூன்றுடனைந்தையும்
உத்தமனோரகுசத்தமனேயென்று பஜனை

சந்தேகமென்பதுவிடுக்குஞ்-சஞ்சலப்பஞ்சுக்கு தணலாய்க்கொடு
தந்தேனிலங்கையென்று சாற்றிச்சரணடுக்கும் [க்கும்
சரமைகணவனுக்குச்-சந்தோஷங்கொடுக்கும்

வீணனசூதும்வாதும்-விளம்பி அலைந்ததுபோதும் போதும்
காணுமஐயனுரைக்கலைவான்மீகியோதும்
காவியமாகியகாரணங் கண்டெப்போதும் பஜனை

ஆயிரமகமொருகோடி-ஆனிதரைதானமிடாகுமோதேடிப்
பாயிரமறைகளும் பகருந்துதிபைநாடிப்
பாகவதமறிந்த பாகவதரைக்கூடிப் பஜனை

அசலரிவையங்களைக்கண்டு-ஆசைகொண்டலையுமவமதிவிண்டு
தசமுகனொடுகீசகனிவரிரண்டு
சாட்சிகளைநன்றாக வீட்சித்தாநந்தங்கொண்டு பஜனை

தந்தைதாய்தநயரைநம்பித்-தாரந்தனக்குங்கதிதானென்றுவெ
சிந்தைபடாமலவன் செயலென்றியம்பிச் [ம்பிக்
சீதாபிராமனைதிடமாய்நம்பி

இல்லாத்தினிலிருந்தாலும்-இதயமலைந்தெலாமீவதுபோலும்
சில்லறைத்தெய்வங்களைச்-சிந்தனையொருக்காலும்
செய்யாமலாண்டவன் சேவடியைமென்மேலும் பஜனை

த்ரதனங்களுக்காசைபபட்டுப் பாகதிவேனுமென்றபயமென்ப
சுரதமூர்த்துயிலவுஞ் சோறுண்பதையுந்தொட்டுச் [துகெட்டுச்
சுகமென்றுநினைக்குந் துர்ப்பித்தியைவிட்டு பஜனை

மெத்தநதிதலங்கள்திரிந்து-மெய்வரும்வகையைவிடுத்தன்புபுரிந்
சித்தசுத்தராய்த் தினந்தோறும்பரிந்து [து
சின்னசாமிதாசன் செய்யும்விதந்தெரிந்து பஜனை

நூல்.

எ-இராகம்-மூகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

என்கெட்டுப்போகிறீரையனைநினைக்காமல்
இந்தபுவியில் நரகணங்களே
நான்சொல்லுமார்க்கத்தையறியாமற்கெடுவது
நலமேபாருஞ் சீவப்பிணங்களே
குனிந்துகண்டுமகிழுமடலைநாளைவன்னி
கொளுத்துவதரியீரோமூடரே
கனிந்தப்போதுருகிபழுதாலுமெமனுக்குக்
கருணையுண்டோகுடிகேடரே
சிரித்துசிரித்துக்கொண்டு தெய்வத்துக்குமஞ்சாமல்
செய்தகாரியமெல்லாம்பின்னாலே
மரித்தபின்னு முன்னுமழுதனுபவித்து
வதையவேணடிவருந்தன்னாலே
இருக்கும்போதேமோசஞ்செய்யுந்தேசபந்துக்கள்
இறக்கும்போது கூடவருவாரோ
பெருக்கப்பெருக்கக்கும்புகூடிக்கொண்டிருப்போர்கள்
பேரின்பப்பதவியைத்தருவாரோ
ஊத்தையாகியமலமொன்பதோட்டையிலும்
ஒழுகும்சடத்தைச்சதாகாலம்
பார்த்துமிகவுமபிமானமடைவதெல்லாம்
பாழென்றறியாதென்னகோலம்
நீர்மேற்குமிழிபோல நித்தியதேகத்தை
நிலையென்றுநினைப்பதே பெருமோசம்
பார்மேலாராவது நிலையாயிருந்தாரோ
பாருமிதுவேதண்ட தரபாசம்

அன்னியமாதனுபோகம் ப்ரத்தியட்சம்
ஆனவிஞ்மென்றுதானே
தன்னுடைமாதனு பவமொன்றிற்கலங்தகஞ்
சமென்றெண்ணுமவன்புத்திமானே

சோரத்வதோஷந் தொலேயநவநீத
சோரனைசேவிக்க லாகாதா
ஜாரத்துவத்தால்வந்த பாதகங்கோபிகா
ஜாரனைப்பாவிக்கப் போகாதா

திருடன்திருடுவதுண்டு புதுமையான
செய்தியொன்றிதுபண்டு கேட்டீரோ
திருடுத்திருடுகின்ற வகையறிந்துமனத்
திருட்டையொருக்கவு மாட்டீரே

சார்த்தகமில்லேயென் றறிந்துமறியாமல்
சடமதியாலிங்கப் பொய்ங்நாட்டு
வார்த்தைகளேச்சொல்லிக் காலத்தைக்கழிப்பது
மாயையினலுண் டாக்கியமூட்டு

சூதமசோணித சுக்லசம்பந்தத்தால்
தோன்றுமுடலுக்கது பொருந்தீட்டு
பாதகமாகிய நடுக்காலத்தீட்டோடு
பஞ்சத்வதீட்டொன்று வருந்தீட்டு

இந்தமூவர்சௌச மெந்தநதிகளிலும்
எங்குமுழுகினலு மிடையாது
அந்தராமநாமஜபஞ் செய்தாற்போகும்
அதற்குநிகரொன்றுங் கிடையாது

நாமஜெபஞ்செய்யும் போதுமனதந்த
ராமன்பதம்பிரியக் கூடாது
தாமசராஜச மிரண்டையும்நீக்கினல்
ரஞ்சலித்துநெஞ்சமோடாது

மனத்தைநிலேநிறுத்தும் வகையிதுவென்றறிந்து
மனத்தைமனந்தன்னுற் பாரீரோ
மனமதநியின்மின்னற் கொடிபோன்றசிவனை
வஸ்துவின்பதந்தன்னிற் சேரீரோ

சேரும்போதுமனத்தை யாகாசமார்கச்
செய்துண்டாகுஞ் சுகத்தைக்காணும்
ஆறுமுறவென்று தோணுதுதோணுவ
தடங்கலும்பத்த மாகவேதோணும்

சற்குணவான்களுக் கெல்லாமிராமமயம்
சகுணமீதென் றனை யாளும்
நிர்க்குணோபாசனை யுமிதுதானந்த
நிச்சயத்தைச்சொல்லக் கேளும்

ஆரையும்பிர்மமய மாயறியும்வகை
அறிந்தானந்த மடைந்துய்வீரே
நீரினீரைப்போலும் பாலிற்பாலைப்போலும்
நெய்யில்நெய்யைப்போலுஞ் செய்வீரே

சகுணமானாலுநிர்க் குணமானாலுமிராம
சர்வோத்திமகியானம் வரவேணும்
வெகுஜன்மகோடிகளுக்குமேலுண்டாகி
விளங்குமதுவேமுத்தி தரவேணும்

இப்படிசாதகஞ் செய்பவனெப்போதும்
இல்லறத்தினிலிருந் தாலும்
எப்படியிருந்தாலு மொட்டாதவன்சேற்றில்
இருக்கும்பிள்ளைப் பூச்சியைப்போலும்

ஆரியனாகிய யோகினைத்தோஷந்தான்
அண்டாதென்பது மறியீரோ
சூரியதேவனக்கினி தேவனைப்போலும்
சுத்தனென்று குறியீரோ

எந்தவேளையும்ராம நாமத்திலிச்சைகொண்
டிருப்பதுவேநல்லதொண்டாமே
சந்ததம்மதனைச்சிந்தனை செய்தாலிப்தச்சுகம்
தானேவரவரவுண்டாமே

இன்னவகைசொல்லி யென்னையடிமைகொண்டே
இதுவேநிலைவரமென்றானே
சின்னசாமிதாசன் சித்தகமலத்தில்
சீதாசமேதனாய் நின்றானே

௮-இ-ம்-யமுனகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

பவரோகமருந்து பக்ஷமாயிதையருந்து-மனமே

அநுபல்லவி.

அவனியிலின்னம் பிறக்க வொட்டாது
அஞ்ஞானிகளுக்கொருக்காலுங் கிட்டாது (பவ)

சரணங்கள்.

இதுநேமத்துக்கு நேமமே
இதுஜெபதப ஹோமமே
அதுலமாம்பரந் தாமமே
அளிக்கும்ராம நாமமே - பவ

பண்ணவருத்தந் தாராது
பணச்செலவும் வாராது
உண்ணக்கசப்பு மிராது
ஒன்றுந்தாது நிகராகாது - பவ

இன்னவகையென்று கண்டு
இதயநிச்சயங் கொண்டு
சின்னசாமிதாச னுண்டு
சீரணிந்ததாகும் பண்டு - பவ

௯-இராகம்-காபி-ஆதிதாளம்.

பல்லவி.

நம்பிக்கெட்டவ ரில்லையே-ஆகையினாலே
நம்பாதவர்க்குத் தொல்லையே

அநுபல்லவி.

அம்பிகையுமானா மானந்திக்கு நாமனை
தும்பிக்குங்கதிதந்த துரைரகு ராமனை (நம்)

சரணங்கள்.

வாயசத்தையுங்காத்த வரகருணாம் பதியை
மாயசம்சாரம்விட்ட மகத்துவர்க்குக் கதியை

பாயசரூபனைப் பரமகுண நிதியை
தோயஜநேத்திரனைச்சூரகுல பதியை - நம்
காயஜஜனகனைக் காயமில்லாளை யேக
நாயகனைக்கோசலை நந்தனனைய மோக
சாயகனைவர தாயகசாது லோக
நேயனைநிர்மலனை நித்தியனை நன்ருக - நம்

பொன்னடியிற்பணியும் புண்ணிய ரார்த்தியைத்
துன்னவிடாமற்பஞ்சாய்த் தூரத்திடுங் கீர்த்தியைத்
தன்னருளால்நிறுத்துந் தத்துவப் பூர்த்தியைச்
சின்னசாமிமனத்திற் றிரமாய்நின்ற மூர்த்தியை - நம்

ராகம்-கமாச்-ரூபகதாளம்.

பல்லவி.

ஜனனமேதுக்கு இந்தநர ஜனனமேதுக்கு

சரணங்கள்.

அனவரதமுங்கனகமய வசனஸ்வரூபத்தை
மனனஞ்செய்யாத (ஜனன)

ஆதிசேஷன்மடி மீதிலிருக்குமநாதியென்னும்
பரஞ்சோதியைக் காணுத (ஜனன)

சாரமில்லாத சம்சாரத்தைப்பரம கோதாமென்
றென்னேரமு மெண்ணுத (ஜனன)

காமனையுங்கஞ்சப் பூமனையும்பெற்ற
வாமனைச்சீதா பிராமனைநம்பாத (ஜனன)

சேமத்தைக்கோரிக் காமத்தைத்திருட்டு
நேமத்தைவிட்டரி நாமத்தைச்சொல்லாத (ஜனன)

சதையையுமந்தச் சிதையுங்கண்டு
சுதையைக்கோரி கதையைக்கேளாத (ஜனன)

உருப்பையினெய்யும் பருப்பையும்போடும்
விருப்பைவிட்டன்பர் செருப்பைநண்ணுத (ஜனன)

அகவானைவிதி மகவானையாளும்
பகவானைநித்திய சுகவானைவிடும் (ஜனன)

சோதனைசெய்தாலு நாதனையேகூடும்
சாதனைசெய்யாமல் யாதனையடையும் (ஜனன)

எண்ணமறப்புமற் றுண்ணமிராமனைத்
திண்ணமாயடையும் வண்ணமறியாத (ஜனன)

கெண்டையொத்தவிழி செண்டையொத்தமுலை
கொண்டையைக்கண்டையன் தொண்டைமறந்திடும் (ஜன)

தன்னையறிந்துபிர சன்னனாயிருக்கும்
சின்னசாமிதாசன் சொன்னதறியாத (ஜனன)

கக-இ-ம்-பியாகடை-ரூபகதாளம்.

பல்லவி.

ராமதத்துவமறியா ரிந்தநானிலத்திற்சிறியார்

அநுபல்லவி.

சோமசேகன்றியும்வேதண்ட
சுண்டாயதபுச்தண்டகோதண்ட (ராம)

சரணங்கள்.

வாமனூருடகனுக்கு	வன்ன
வாகனனாதரவாகப்பிர	சன்ன
நாமகளுண்மையைநவிலுவா	ளன்ன
நாரதனென்னும்விசாரதனுஞ்	சொன்ன-ராம
ஆதியிற்சனகாதிகள்	துல்லிய
அமலரொன்றனருள்	வில்லிய
சாதியில்வந்த சபரியைப்	புல்விய
சந்தாபந்திர தபோதனர்	சொல்லிய-ராம
சந்ததமு மிரதங்களை	விண்ட
தாசருக்குந் தாசரையு	மகண்ட
சிந்தனைசெய்யும்பிர சித்தருக்குஞ்செ	தாண்ட
சின்னசாமிதாசன் தெரிந்து	கொண்ட-ராம

கஉ-இ-ம்-அடாணா-ஆதித்தாளம்.

பல்லவி.

நாமாமிர்தபானமுகந்துசெய்யா மூட
நான்சதுஷ்பாத செந்துவையா

அநுபல்லவி.

ஸ்ரீமானருங்கைலை சிகரத்தில்வாழுஞ்சோம
சேகரனுமம்பிகையுஷ் சிவனஞ்செய்யும்ராம நாமா

சரணங்கள்.

பாழுமனதவரவெனுங்காற்றிலிலவம்பஞ்செனப்பறந் தோடித்
தாழும்விதத்தைவிடுத்து தாசரதிபதத்தாமரைக் கூடி
வாழும்வகையைக்கண்டு விருப்பங் கொண்டு
வனவேடனேடி வந்துமறிக்கப் பண்டு
எழுமுனிவர்களு மிடம்பநம்பி பவ்விய
இருடியானதறிந் திசைந்து திவ்விய-நாமா

ஆசினிக்கனிமுதலாங்கனிகளிதா மானநாமங்க ளெல்லாம்
யோசித்துப்பார்க்குமளவிலிதற்கீடென்றுரைப்பதுவீண்சொல்லாம்
வாசிக்கவருள்புரியும் ராமாயண
மகிமைதெரிந்தவர்க்கு மதுரமுந் தெரியும்
காசினியிலெவருங் கடைத்தேறப்ரவே சிக்கும்
காசினியிலீசன்வலது காதிலுப தேசிக்கும்-நாமா

எனதாண்டவனென்றுதனதாய்தானுமுரைத்தெவர்க்குமரசனைசெய்து
வனஜாசனஜனகனையனுதினமறவாமற்பஜனை செய்து
இனத்துடனடிமைபண்ணி மந்திரங்க
ளேழுகோடிகளுக்குமீ தெடுப்பென்பதையு மெண்ணித்
தினமும்ராமநாம சித்தாந்த பாரக
சின்னசாமிதாசன் செபிக்கும் தபாரக-நாமா

௧௩-இ-ம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி

இதரதெய்வங்களைத்தொழுவது கொழுத்தா-அல்ல
தீனகருமத்தாலாயனெழுது மெழுத்தா

அநுபல்லவி.

மதகரிதனைமுதலை நெருக்க
வந்திக்கும்போதாளவந்தவ னிருக்க இதர

சரணங்கள்.

சிவனயனெனுடுஜெகத்தையெம்பெரு மானே-ஆதியில்
சிருஷ்டித்தனுப்பிரவேசித்துமிருப்பவன் றானே

அவனன்றியோரணுவு மசையாது
தாகையாலுத்தம ரகத்துக் கிசைய-இதா

புராணுமறைகள்புகழ்ந்து திரும்பும்போது கண்டோதும்
புருஷசூக்தபெருமை கண்டும்வா தேது
சகலமுமாய்த்தங்குமூ வெட்டுத்
தத்துவங்களைப்படைத்தவனை விட்டு-இதா

கேசவனேதெய்வங்கேளுங்களென்றுசபதம் வியாசர்
கெட்டியாய்ச்செய்ததை யொட்டிநடப்பது சபதம்
ஈசாதியாகமிரந்தபெல்லாம் சோதித்தும்
எத்தனேபோதரமெடுத்துப் போதித்தும்-இதா

தருமாதிநாலுங்கருந்தெய்வமிரண் டுண்டோ-இதைச்
சற்றும்பாராமறபிதற்றுவதுமென்ன கண்டோ
திருமணாளனருளைப் புல்லியும்
சின்னசாமிதாசன் தெரியச் சொல்லியும்-இதா

கச-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

நாராயணநாமபாராயணஞ்செய்வாரே
நானிலத்தில்மா கலமாயுய்வாரே

அநுபல்லவி.

வாராயணங்கேயின்ன வாறென்றுரைப்பதற் கன்ன
வாகனனுமாகாதென்ன மகிழுமைக்கீசன் சொன்ன-நாரா

சரணங்கள்.

அந்தணனகப்பிறந் தசாமினனவன் மூந்த
மந்தமதியால்மதங்க மாதினமருவ வந்த
நந்தனர்களோடுங்கூடி நாணமுற்றிருந்துஞ் சொந்த
மைந்தனைப்பேரிட்டழைத்தமாத்திரத்திற் கதிதந்த-நாரா

காயாதவனைப்பெற்ற கனககசிபு மெத்த
வாயாடுமிவ்விகலே வதையுமென்று பிதற்ற
ஓயர்மலரக்சர்க லோங்கியடித்துக் குத்த
ஆயாசமுண்டாகாம லாதரித்தின்ப மளித்த-நாரா

பெற்றாருந்தாருங்கூடப் பிறந்தாருற வடுத்த
மற்றோருங்கோபங்கொண்டு வைதவமானப் படுத்த
இத்தரணியிற்றவ மேகசித்தனைத் தொடுத்த
உத்தானபாதசுதனுக் குயர்மேருவைக் கொடுத்த-நாரா

என்னகருமஞ்செய்தாலு மெந்நாளும்பருப்பு நெய்யும்
அன்னமிட்டாலுநதிக ளாடினுங்கோடிபொன் னையும்
இன்னமென்னதந்திட்டாலு மிதற்கீடாகாதென் றுய்யும்
சின்னசாமிதாசனாவிற் றிறமாய்நர்தனஞ் செய்யும்-நாரா

௧௫-இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

மனமேநான் சொல்வதெல்லாந் தனமே

அநுபல்லவி.

சினமுமிராஜஸ முநன்றன்று
தீதுநலந்தரும் ஜென்மம்வருமென்று மன

சரணங்கள்.

என்னதென்றுநானென்று மெண்ணாமல்
எல்லாமிராஜன்றிருவிளையாட்டென் றெண்ணுவாய்
எண்ணுவாயமுத முண்ணுவாயானந்த
நண்ணுவாய்சாதகம் பண்ணுவாய்-மன

அனவரதமுமாசாதிகளாரையும் நீருக்கான
லாத்மாராமனை பிறந்தலையாதே
மலையாதே வினைக்கலையாதே பவந்
தொலையாதேசுக நிலையாதே-மன

உன்னையுற்றுப்பாராம லுலகமெல்லாம் வனமயமென
றுன்னுவதுள்ள துயகநீயா ஓதுவா
போதுவாயிருளை மோதுவாயறி அறிந்தாற்
றீதுவாய்க்காதுபின் னேதுவாய்-மன

தினமுஞ்சின்னசாமிசொன்ன திண்ணமா உபதேசமுனக்கு
தெரிந்துவேறுதெய்வமென்று தேடாதே
தேடாதேயென்றைக்கூடாதே எங்கு
மோடாதேநொந்து வாடாதே-மன

௪௬-இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

மயங்கிநிற்காதே வீணபி மானம்வைக்காதே

அநுபல்லவி.

புயங்களையும்விழி நயங்களையும்பிரண்டு
குயங்களையுமதி சயங்களென்றுகண்டு மய

சரணங்கள்.

ஆகம்விடும்போது மோகஞ்சென்றவிடர்
தேகம்வருமென்றுவி வேகத்தாலறிந்
தேகமாகும்பிர்ம யோகமதைப்பிறிந்து
சோகந்தரும்விஷய போகத்திலிச்சைகொண்டு மய

தாயுந்தந்தையுஞ்சேரப் பாயுமலங்கலந்து
தோயும்போதுண்டாகி வாயுவால்வளர்ந்து
சீயுஞ்சதைநரம்பும் பீயுமாயிருப்பது
சாயும்போதுநாயுந் தீயுமுண்பதுகண்டு மய

அழியுமுடலிலிரு விழிமுதலொன்பது
வழியிலுகலமென்று மொழிவதறிந்துகெட்ட
பழிதருங்கடிதடக் குழியிற்பழகிசெய்யுந்
தொழிலைவிடென்றுசொல்லு மொழியைமறந்துவிட்டு மய

ஆங்காலங்கெட்டலைந்து போங்காலம்வரும்போது
தாங்காரெவருமென்று சாங்காயமிதைவிட்டு
நீங்காமலின்னங்கூடி யேங்காதேபந்தம்விட்டு
தேங்காயிற்கொப்பரைபோற் பாங்காயத்தேகத்திலிரு மய

இன்னமுனக்குநா னென்னசொல்லவேண்டும்
அன்னதைவிவரமாய் பன்னலாகுமென்று
நன்னயமாயனிச முன்னடக்கத்தைக்கோறிச்
சின்னசாமிதாசன் சொன்னதறிந்திருந்தும் மய

௪௭-இராகம்-பந்துவராளி-அடதாளம்.

பல்லவி.

சஞ்சலப்படாதே நெஞ்சமே-நமக்குகதி
தாசரதிசரண கஞ்சமே

அநுபல்லவி.

பிஞ்சகணஞ்சனைப்பெற்ற பிள்ளையாகிதிருக்காலும்
பெற்றவாறறிந்துபர தத்துவங்கண்டொருக்காலும் சஞ்

சரணங்கள்.

எந்தவேளைஜன்ம மெடுத்தோமோ வப்போதே
எழுதுமெழுத்துக்கிரண்டு நடக்காதே
அந்தப்படிவருமெள்ள ளவுகூடத் தப்பாதே
அலைந்தாசைகொள்வதி லதிகமும் வாராதே
இந்தப்பூவிலறியா ரிரண்டாவிரண்டைத் தொட்டு
இரண்டையொழிக்காம லிருக்கும்வகையை விட்டு
உந்தனுக்குக்ஷேம முண்டாவதை நட்டு
உடலைப்ராரப்தத்துக்கோபித்துமாதை பட்டு சஞ்

தீமைசெய்பவருக்குச் சித்தாந்த போதனை
செய்யாமலனிசைமும் ஸ்ரீரகு நாதனை
சீமையிலுத்தமர் தியானிக்குஞ் சாதனை
தெரிந்துமுனக்கெது திரிந்த வேதனை
ஆமைபோலேபொது மைந்தையடக்கிக் கொண்டு
அன்னியவார்த்தையி லாசையென்பது விண்டு
ஊமையைப்போலிருந் துள்ளெண்ணமும் பிண்டு
உறுதியிலானந்த முண்டாவதைக் கண்டு சஞ்

நிந்தனைக்கிடமாகு நீசர்நேசத்தைத் தள்ளு
நிர்மலபக்தரை நித்தம்நினைவிற் கொள்ளு
பந்தமுதவுமகம் பாவமென்பதை விள்ளு
பரமாநந்தசுகானு பவமறிந்து துள்ளு
மந்தமதிகொடுக்கு மாயை வோரிய
வழிமொழிந்தேனிந்த வாறுனக்குத் தெரிய
சந்ததமுஞ்சின்ன சாமிதனைப் பெரிய
சாமிதிருவடிக்குத் தாசனாகப் புரிய சஞ்

௳அ - இராகம் - உசேனி - அடதாளம்.

பல்லவி.

சில்லறைத்தெய்வங்களிடத் தாசை
செல்லாமலிருப்பதே பூசை

அநுபல்லவி.

புல்லரைப்போல்மதம் பூண்டுவீணைக் கெட்டுப்
போகவேண்டுமென்று புருஷோத்தமனை விட்டு சில்

சரணங்கள்.

கத்தியைவெள்ளியென்றுஞ்சொல்லிக் கஞ்சியைச்
சுதையென்பதெனை மிண்டோ
தூயமாகதத்தைப்போலேகருங் கல்லாலே
சுகமுண்டென்றகங் கொண்டோ
பத்திசெய்வதிலென்ன பலனுண்டென்று கண்டோ
பாடிக்குத்திஞ்னும் பதலரிசி யுண்டோ சில்

அரசுக்குப்பூவரசானிக்குக் குட்டி
யாசினிநிக ராமோ
அரும்பசும்பொன்னுக்குக்காக்கைப் பொன்னையி
டாகச்சொல்லு வோமோ
சாஸிசந்தனக்கல்வி தாழைக்குக்கற்றாழை தாமோ
தானுககிதரங்களைச்சரியென்றுரைக்கப் போமோ சில்

பூதப்பவளத்துக்குமண்பவள மீடெனிற்
புனிதர்க்குமன நோகும்
புண்டரீகாட்சனையன்றிவேறு செய்தாற்
புண்ணியமொழிந் தேகும்
ஆதபத்பத்திலாதபத்ர மகலச்செய்து போகும்
அம்புதத்தினிழலை நம்பும்வகை யாகும் சில்

புண்டரீகத்துக்குப்பூனைநிக ரென்னும்
போதமில்லா ராரோ
புரவிக்குக்கழுதையம்புதத்துக்குப்பனி மப்பம்
புதிக்குக்குட்டை நேரோ
துண்டரீகமதியால் துஷ்டருஞ் சொல்வாரோ
சொல்லுமவருக்குச் சுஜனரென்றும் பேரோ சில்

சிப்பிமுத்தை யாணிமுத்துக்குச்சரி யென்று
: செப்புவதென்ன புத்தி
தெரியாவிட்டாலுந் தெரிந்தவரைக் கொண்டு
தெரிந்துகொள்வதே யுக்தி
தப்பிதச்சொல்லைநி தானிப்பதே சத்தி
தாரதன்மியமறிந்து சாற்றுவதே பத்தி சில்

சோற்றுக்கும் துணிமுதலுக்குமாசை கொண்டு
துஷ்டருக் காக வீணும்
சொல்லிக்காலங்கழித்தா லானந்தம் பூணும்
சுகமெப்போது தோணும்
காற்றுள்ளபோதல்லோ தூற்றிக்கொள்ள வேணும்
கடைத்தேறும்வகைநன்றாய் கண்டுரைத்தேன் காணும் சில்

உள்ளங்கெடுவகை துர்ச்சன சங்கத்தை
யொருக்காலுமுன்னே னுன்னேன்
ஓதுவாரோதும்வாறி தாங்களை மன
முகமுந்துதுன்னேன் துன்னேன்
தெள்ளமுதையன்றித் திடமாய்ப்பன்னேன் பன்னேன்
சின்னசாமிதாசன் தெரியச்சொன்னேன் சொன்னேன் சில்

தெசு - இராகம் - சௌராஷ்டிகம் - ஆதிதாளம்,

கண்ணிகள்.

இந்தப்பிறவியெடுத்தென்ன தருமதானமே தாவ தளித்தோமா
அந்தத்தலங்களைத் தரிசித்துத்தீர்த்தங்க ளாடிதான் களித்தோமா
நித்தியநைமித்தியக்கருமங்களை நிலையாகச் செய்தோமா
பத்தியென்னுங்கதியால் வித்தியாபாக பந்தத்தைக், கொய்தோமா
கொந்திக்கிளியறியும்வாறகிலக்கலையிற் கோவித ஞானமா
தந்திக்கிராமத்திலையனுக்குவபனஞ் செய்தனுவித ஞானமா
சீமானன்று சஞ்சாரஞ்செய்தவனத்திற் செடியா யிருந்தோமா
கோமானரவிந்தபாதத்துகள்படிந்த கொடியா யிருந்தோமா
சேதுவைப்பரிசுத்தஞ்செய்த திருவடியைச்சேவிப்ப தெக்காலம்
பாதுகையுலகாளச்செய்த திருவடியைப்பாவிப்ப தெக்காலம்
பாகீரதியைப்பாவனஞ்செய்த பாதத்தைப்பார்ப்பது மெக்காலம்
போகீசனேந்தியபதத்தைக்கண்டானந்தம்போர்ப்பது மெக்காலம்

பிரமனிந்திரனரனும்பணியும் பதத்தைப்பேணுவ தெக்காலம்
கரசஞ்சத்திலனுமன் தாங்கியபாதத்தைக்காணுவ தெக்காலம்
என்னசாமியென்றடிக்கடிவேண்டிக்கொண்டிருப்பதை வென்றோமா
சின்னசாமிதாசனென்ற பேரிலென்றுந் திரமாக நின்றோமா

உ௰ - இராகம் - ஆரபி - ஆதிதாளம்.

பல்லவி.

சந்திரோதயமாச்சே-ராம
சந்திரோதயமாச்சே

அநுபல்லவி.

இந்திரனுக்கும் விதிக்குமீசனுக்கு நாலான
எடுப்பாங்கலைக்குந்தவந் தொடுப்பார்க்கும் மேலான சந்

சரணங்கள்.

காமாதிகளாகுங்கள்ளர்பயந் தேங்கக்
கருத்தெனும்பாற்கடல்கண்டுபொங்கி யோங்க
ஆமாகாதென்றறியுமறிவாம்பலின்பந் தாங்க
அஞ்ஞானமாமிருளானதுவிட்டு நீங்க சந்

சந்ததமும் வைகுந்தசாகேத வாசத்தில்
சந்தோஷமில்லையென்றுதாசபா தேசத்தில்
எந்தநாளுமிருப்பேனென்று சொன்ன நேசத்தில்
இருபுருவநடுவிலிருக்கு மாகாசத்தில் சந்

முத்தாபமெனுந்தாப முழுதுஞ்சுத்த மாயாற
மூவாசையரமம்போசம் முகுளீபவத்தைக் கோறச்
சித்தசகோரத்துக்குச்சீவனானந்த மூறச்
சின்னசாமிதாசன்பாற்தெரிவைக்கு மயல்மீற சந்

உக - இராகம் - மோகனம் - ஆதிதாளம்

பல்லவி.

ஆராதனஞ்செய்வேனே அஞ்ஞானத்தின்
அடிவேரையுங் கொய்வேனே

அநுபல்லவி.

ஈராறுநாமனையினகுல சோமனை
இருதயக்கமலத்திலிருக்கு மிராமனை ஆராத

சரணங்கள்.

ஆனந்தாமிர்தத்தாலபிஷேகம் புரிந்து
ஆசையெனும் பொன்னுடையலங்கரித்துப் பரிந்து
ஞானன்பெனுங்கந்தத்தை நலமாய்ப்பூசத் தெரிந்து
நாமமாகுந்துளப நவமல்லிகை • சொரிந்து ஆரா

மகத்தானகிருபையென்னு மணிமகுட சூட்டி
வடகலைதென்கலையின் வல்லமையங்கதம் பூட்டி
மிகப்பிரசங்க சக்தியாமின்னுமாரக் கூட்டி
விளக்கும்பிராணதூபமும்விக்கியான தீபமுங் காட்டி ஆரா

வார்த்தைகளைமணி வாத்தியங்க ளாக்கி
வணங்கியசயனிப்பதை வந்தனங்க ளாக்கி
சார்த்தஞானப் பொறியைச்சத்ரசாமரங்க ளாக்கி
சகலோபசாரங்களைச் சம்பூரணங்க ளாக்கி ஆரா

ஆறுவர்க்கங்களாகுமாறிரசங்கள் கூடும்
ஆத்மபிரசாதத்தை அர்ப்பணஞ்செய்து நாடும்
தேறும்புத்திகற்பூர தீபப்ரகாசத் தோடும்
சின்னசாமிதாசன் ஜெமெங்குங் கொண்டாடும் ஆரா

---

௨௨ - இராகம் - துவாசந்தி - அடதாளம்.

பல்லவி.

மனதைநிலைநிறுத்தும் மார்க்கஞ்சொல்லாயோ
வந்தெதிர் நில்லாயோ

அநுபல்லவி.

தனதாயுனதுபாத தாமரையைக்கூடிவாழும்
சாதகத்தையகற்றித்தாழும் பாதகத்தையகற்றில்ப்பாழும் மன

சரணங்கள்.

திரைக்கடலில்வடவைச்சேந்தழலும் நஞ்சம்
சிவன்கழுத்திலும்விண்ணில் தேவருலகுங் கொஞ்சம்
கரையுமில்லாமலாழக் கடலிருப்பது முன்றன்
கட்டளையாயிருக்கக் கசடனுரு மென்றன் மன

பொய்யாமிர்தப்புவனமெய்யாகத் தோணும்
புத்திபோகசிவன் முத்தனுக வேணும்
ஐயாநின்னைக்கூடி லானந்தமே பெருக்கும்
அநுபவமுந்தெரிந்து மலைந்துகொண் டிருக்கும் மன

சோற்றுக்குஞ்சூத்துக்குதுணிநீதிக்கு மல்லாம்
தொழிலொத்திருக்கிலாக்கசுதனுக்கென்ன சொல்லலாம்
நேற்றுநடந்ததை நீக்கிவரப் போற
நினைவகன்றுனந்த நித்திரைத் தேனூற மன

தூஷணைபூஷணையில் துன்பமின்ப மில்லாமல்
துஷ்டர்சிஷ்டரென்றெண்ணித் தோஷத்திற் செல்லாமல்
பாஷணையுன்பாத்திற் பண்ணவு மிந்தப்பூமி
பரமுமுன்மயமென்று பார்க்குஞ் சின்னசாமி மன

உரு - இராகம் - முகாரி - அடதாளம்.

பல்லவி.

எவருக்காயவதார மெடுத்ததுமெய்யா
என்றனுக்கோது மையா

அநுபல்லவி.

அவனிற்பாக்கியவானவனென்றா கையினாலே
அறிந்துபணியவர்சை யானேனுகையினலே எவ

சரணங்கள்.

நாமசங்கீர்த்தனஞ் செய்துமனமகிழும்
நாரிபாகனென்னுஞ் சிவனுக்கா
நாமகளோடுபாராயணஞ் செய்தா
நந்திக்குநளினசம் பவனுக்கா

பாமரனுகிய ராவணனுல் வந்த
ப்பயந்தீரப்பணியும்வா சவனுக்கா
மாமகிமையுள்ளராமாயணஞ் செய்த
வான்மிகியெனும்மா தவனுக்கா எவ

பாதாரவிந்தத்தைக் கரத்தினிலேந்திய
பவனத்தனயனநு மானுக்கா
மேதாவியாகிய குகசம்பிக்கா சொல்லும்
விதியருளுஞ்சாம்ப வானுக்கா
மாதாகுஞ்சபரிசடாயுராஜ னுடன்
வானரச்சேனையின் கோனுக்கா
வேதாந்தவேத்தியசரணமென்று வந்த
வீடணனெனுமடி யானுக்கா எவ

கோமளரூபத்தைக்கண்டுள்ளம் பொங்கும்
கோசிகனெனனுமு னிவனுக்கா
ராமராமவென்றழைக்குந் தசரத
ராசனென்றுசொல்லு மவனுக்கா
பூமகளாஞ்சீதைதன்னைத்தந்தா னந்தம்
தாமரசிதளலோசன சின்ன
சாமிதாசனென்னு மிவனுக்கா எவ

உச - இராகம் - காபி - அடதாளம்.

பல்லவி.

என்னைரட்சிக்கிறேனென்றுகைகொடுப்பதற்
கிதுவேதருணமையா

அநுபல்லவி.

உன்னையேதொழமன முறுதிகொண்டதனுலே
உத்தமவிபீஷணனுக்குரைசெய்ததுபோலே என்

சரணங்கள்.

இதரதெய்வங்களிடத்திலன் பில்லாமல்
இதரகதைகளிலுமிருதயஞ் செல்லாமல்
சத்தமுங்கதியுன்றனபதபதும மல்லாமல்
மதம்வேறில்லைபாகையால் மறுவார்த்தை சொல்லாமல் என்

என்றன்வாயுன்னும மென்றுமியம்பக் காதும்
உன்றன்சரிதைகேட்க வுள்ளக்கமல மீதும்
சந்ததமுன்பா தஜலஜ மிருக்க வோதும்
இந்தவரந்தந்தே னிந்தாவென்றெப் போதும்-என்

பண்டவதரித்த பக்தகோடிக ளெண்ணம்
கொண்டவாறகிலமுங் கொடுத்துக்காத்தது திண்ணம்
அண்டரைக்காக்கவுமவதரித்தாய் தண்ணம்
புண்டரீகாமபகப் பொருளேயந்த வண்ணம்-என்

நலமிகுங்கைலாசநாதன்விண் ணீசனும்
வலசூததனனுதி மறைபில்வீசு வாசனும்
மலரயன்முதற்பாகவதகோடி நேசனும்
தலம்புகழும்சின்னசாமி தாசனும்-என்

ஆவணக்காப்பக ... சென்னை-600 008. 149847

25-இராகம்-நாதநாமகிரிகை-ஆதிதாளம்

பல்லவி

ஸம்சாரிகளானுலென்ன தன்னியாகாரோ

அநுபல்லவி

இம்ஸாதிகளேவிடுத்துப் பரமஹம்ஸாதிகளேயடுத்தெதுகுலாவ
தம்ஸாநியேசரணமென்று சம்சாரியைவணங்கும்பேர்கள் (சம்)

சரணங்கள்.

பாகவதராமாயண பகவத்கீதைசகஸ்திர நாம
பாராயணமுமிராம நாமபஜனேயுமதிக நேம
மாகநித்தியகருமம் பரோபகார
கேமனதாகத்தருமம் புரிந்துஜகந்
மோகனன்பதத்திருமஞ் சனங்கொண்டன்ன
வாகனன்றுவருமம் புஜனுமனும
மேகவண்ணனிருமெல்லடிகளுக்கேதொண்டு செய்துமுனிவர்
ஏவதபூதநாதரதிகளுள்ளங்கண்டு அவர்களெல்லாம்
பாகவதாகளெனப்பரம நிச்சயங்கொண்டு மூடர்களாகும்
பாஷண்டஜனசம் பாஷணங்களேயும்விண்டு காமாநுசார

தேகம்நிதநியமென்று சதாப்பர
லோகப்பயங்கொண்டகி லாண்டங்களும்
ஆகமவேதோபநிஷத் முறைப்படி
ராகவமயமென்றறியும் போகள்-ஸம்

பிள்ளையனுசரையன்பாகப்பிரியங் கொளளச்செய்து பண்டு
சித்தகமலத்திலன்பு மெத்தவுமுற்றுச்
சுத்தரானபேர்கள்முன்பித் இத்தலத்தினில்
எத்தனைப்பேர்களோபின்பு கற்றுத்தெளிந்தோர்
அத்தனைப்பேரையுந்தென்பு கொண்டுதுதித்து
நித்தியநிர்வலநிர்க்குணநிர்விகாரா சூராதிசூரா
நீரஜநாபநிராமயநிகிலாதாரா மதுசூதன
சத்தியரூபபதங்ககுலசபாரா வாரசந்திரா
சாதுஜனசரண்ணியமாதவ ரகுவீரா சம்பரவைரி
புத்திரபரமதயாகர ராம
பத்திரவென்றன்வரத மனன்னிய
பக்தியுடன்பரமானந்தத் தோடு
நித்தியமுற்துதிசெய்யும் பேர்கள்-ஸம்

என்னசத்கர்மஞ்செய்தாலுமிராமனுக்கர்பண மென்றும்
எல்லாமவன்செயலென்று மிந்திரியங்களை வென்றுஞ்
சொன்னமுறையைத்தளளாமல் தன்மகிமை
இன்னவாறென்றுவிள்ளாமல் எவரிலுந்தான்
உன்னதனென்றுத்தூள்ளாமல் எப்போதும்பிறர்
அன்னத்திலாசைக்கொள்ளாமல் வீணெண்ணங் கொண்டு
மன்னவரென்றுமூடமனிதரைத்துதிசெய்யாமற் கோதண்டபாணி
மகிமையறிந்தபாகவதசனங்களைவையாமற் பரஸ்திரீகளைத்
துன்னமோகங்கொண்டுதொடர்ந்துமனது தொய்யாமற்பெரியோர்கள்
சொல்லும்வழிதவிர்ந்து வழிப்பிரவேசியாமல் சந்ததமையன்
பொன்னடியைத்தியானஞ் செய்துப்ர
சின்னசித்தனுப்பகவத் குணங்களை
நன்னயமாகப்பஜனை செய்யும்
சின்னசாமிதாசனைப் போலே-ஸம்

உகூ-இராகம்-புன்னுகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

சோதனைசெய்லாமா சுவாமிராம
குலங்குந்தாரகநாமா

அநுபல்லவி.

ஆதவன்குலத்திலந்த அமரர்மகிழவந்த
நாதனேயுனையன்றியெந்த நாதனைநம்பினேனிந்த சோத

சரணங்கள்.

மண்டலமளந்தபாதாவாணிமணுளன் வந்திடுமுந்திப்போதா
விண்டலத்துடன்புண்டரீகலோகமாதாமென்றெங்குஞ்சொல்லும் பூ
அண்டரியவினேதா அடியேனுடன்வாதா (வைச்சீதாசமேதா
விண்டருளும்வேதவேதா விமலாகுநாதா சோத

அண்டமுண்டருளும்வாயாவாயுசுதனு ஆஞ்சநேயவரதாயா ஆயிரந்த
குண்டலிசயனமாயாகுவலயாதிகுருவேபெங்கோனேதூயா [லைக்
அண்டர்தொழுமப்பிரமேயா ஐயிரதன்சேயா
தொண்டருக்குதவுநேயா துரையேயாபத்சகாயா சோத

நின்பதபூசனைசெய்யாபாவிநானுநீயென்னவராங்களிய்யாதவனு லோக
துன்பமிடரக்கருய்யாவண்ணஞ்செய்து தொலைத்தகோதண்டக்கையா
அன்பர்களுக்கின்பமெய்யா அளிப்போயென்பதுபொய்யா
எம்பெருமானேதுய்யா ஈதென்னமாயமையா சோத

அந்தமுதலையிடும்வாதுகண்டதம்புரிந்தானைக்காத்தோனப்போது
என்றுரைப்பதுஉன்றனையல்லவோவாவோது எங்கும்புகழும் உத்தமிக்
தந்தவனேயுனக்கிது தகுமோவென்றுந்தகாது கோசலைமாது
சிந்தனைசெய்வதேது சின்னசாமிதாஸன்மீது சோத

உஎ-இராகம்-அசாவேரி-ஆதிதாளம்

பல்லவி.

இல்லாதேயாஉன்னையெல்லாரும்பணிந்துகொண்
டிருக்கிறூர்களையா

கல்லாயிருந்தவ கலிகையைத் தடத்தில்
கண்டுபெண்ணுகச்செய்த மகத்துவமுன் காலிடத்தில் இல்

சரணங்கள்.

தண்டகவனத்தில்வாழுந் தவமுனிவரை நோக்கில்
கண்டகங்களித்தபயக ரந்தந்தவரைக் காக்கில்
மண்டலமும்விண்டலமும் வாழுமென்றரச்கர போக்கில்
சண்டகோதண்டந்தரித்த சத்தியமுனது வாக்கில் இல்

தளிதவனேவிடுத்தன்பு முதிர்ந்தரக்கராங் குளத்தில்
பூத்தகஞ்சம்போ லுதித்த புனிதன்கவி தளத்தில்
மாற்றதிகப்பொன்னடியில் வந்துவணங்க வளத்தில்
காத்தரசளித்தபெருங் கருணேயுன துளத்தில் இல்

அன்னவாகனனிந்திர ஞயிரமணிப் பணங்கள்
துன்னவனீசனனிலசுதனமா கணங்கள்
இன்னம்பரெல்லாமின்பமெய்துஞ் லக்ஷணங்கள்
சின்னசாமிதாசன்துதி செய்யுங்கல்லியாண குணங்கள் இல்

உஅ-இராகம்-அடாணு-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னஞ்சோதனேசெய்வது தர்மமா என்மீதுவர்மமா
இதுவுமெனதுசென்மாந்தர கர்மமா

அநுபல்லவி.

என்னமோசொன்னுனென்றன்னியனுய்ப் பாராமல்
எந்தனபீஷ்டவரந் தந்தருளவாராமல் இன்

அப்போதிபவர விபீஷணுதிகளுக்கபயந்தந்தது புலேயோ
இப்போதந்தவாறெனக்கபயந்தருவ தென்னவுனக்கு மலேயோ
எப்போதுங்கதியுன்ற னிருபாதமென் கோனே
என்றடியேன்சொல்ல வில்லேயோபெரு மானே
தப்போதினுலுமல்லதொப்போதினுலும் நானே
சரணமடைந்தவர்க்கின்பந் தருவேனென்றநீ தானே-இன்

வேடராசனுமோடக்காரனிருக்க வேண்டவாங்க ளத்துக்
கூடப்பிறந்தவனென்றுலிங்கனம்செய்துறவுகொண்டாடிமனங்களித்து
ஆடகலோகத்தையாளுமக வானும்
அன்னவாகனனுனு மம்பிகை கோனும்
தேடரியரணசெங்கமலத் தேனும்
தேகம்பூரிக்கச்செய்த தெய்வமே யானும்-இன்
கவிக்குலங்களுக்கதிபதியைக்குசேலனைக் கழுகாசனை யன்று
புவிக்குளின்னமடியாரைப்புரந்தவகைப் புரப்பதன்றோ நன்று
அவிக்கினமாய்ச்சுகமனுபவிக்கப் பொருந்தும்
ஆசைப்படிக்குவரமனிக்கிலகந் திருந்தும்
செவிக்கின்பமாகுஞ் சரித்திரமுறைத்து வருந்தும்
சின்னசாமிதாசனென்று தெரிந் திருந்தும்-இன்

உகூ-இராகம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

சுத்தசத்வகுணதுரையேரகுவீரா சூராதிசூரா
சுந்தராங்ககருணாபாராவாரா

அநுபல்லவி.

நித்தநித்தமன் புத்தபத்ததுரி
தத்தைதீக்கிபர தத்துவத்தைத்தெரி
வித்துமதிசயசு கத்தைப்பெற்றவரி
சித்தமொத்தபிர சித்தமொத்த சுத்த

சரணங்கள்.

அடியிற்சரணடையு மடியிலிரட்சிப்பேனென்
றடியிலுரைத்ததப்படி
படியிலெருவுமிருக்கும் படியளப்பவனிப்
படிசெய்தாலெப்படி
வடித்துவடித்துப்பல வாறுகசடுகிந்த
படித்துப்படித்துகந்தற் படிப்பாமரம்பிந்த
நடித்துநடித்துமா னந்தசபரிமுந்தக்
கடித்துக்கடித்துவைத்த கனியுண்டருளவந்த சுத்த

கோசிகமுனிவனுங் குறுமுனிவனுமாதி
குருவென் றுன்னைமதிக்க
வாசிஷ்டரும்வசிஷ்ட முனிவனுமவாபி
மதஞ்சரியென் றுதுதிக்கத்
தூசில்லாபூ சுரருமுரைக்கவல்ல
தேசில்லாரிதயஞ் சிவனிடமேசெல்ல
மாசில்லாபிருகுமா முனிகண்டுசொல்லக்
காசினிதனில்முனி கணங்களுகந்தநல்ல சுத்த

வன்னமிகும்வலது பொன்னடியினையொரு
வானரமேந்துந்துறை
இன்னமோரடியை யெனதுமனக்குகைக்
கேந்திடிலென்னகுறை
மன்னுமணிகளுறும் வாரிதிப்படிகொண்ட
மன்னருமமரும் வணங்கிடுங்கொடிகொண்ட
மன்னனென்னும் பாகவதரெழிலடிகொண்ட
சின்னசாமிதாசன் சித்தமிசைகுடிகொண்ட சுத்த

௩0-இராகம்-பைரவி-அடதாளம்.

பல்லவி.

ஆனாலுமிப்படி சோதனைசெய்ய
ஆர்செய்தாருனக்குப்போதனை

அநுபல்லவி.

வானுளுமிந்திரன் மலரயன்கைலைக்கோன்
வணங்கும்பொன்னடியினில் வணங்காதமூ—னான் ஆனா

சரணங்கள்.

அன்றுசீதந்தசெல்வமதனாலடியார் மேலே
ஆசைகொண்டாதரிப்ப தறியாதவனைப் போலே
என்றுமாமனார்வீட்டி லிருக்கும்பெருமை யாலே
என்னைமறந்தாயோ யென்னமோவொருத் காலே ஆனா

நினதன்பன்தனதன்பர் நிகிலருக்கும் விபூதி
நேசித்தீவதிலுண்டோ நீயறியாத சேதி
உனதன்பருக்குநாம முதவிசெய்வது நியாதி
ஒருதனிநீயநாதி யுத்தமபக்ஷ பாதி ஆனா

பனிச்சடைக்கரித்தோலும் பரித்தனதன்ப னக்ஷம்
பார்க்கமின்னுகின்றது பணியாலடியார் வக்ஷம்
மணியுமகுடமும்பொன் வஸ்திரமுள்ளவன் பக்ஷம்
வாராதென்னநான் செய்தவசைபலகோடி லக்ஷம்-ஆனு

பாவமெனதுசுவ பாவமது சேராமல்
பறக்கச்செய்யுநாம பலங்கண்டு வாராமல்
கோவங்கொள்ளலாமோ கோரும்வரந் தாராமல்
குழந்தையாச்சுதேமென்று கொஞ்சமுமெண்ணிப் பாராமல்-ஆனு

அனுமன்றனையனென தன்னைசீதா தேவி
அடியார்கள்பத்துக்களனுசராவிக் காவி
எனுமூவரும்பிதிர்விய ரெங்கும் நீமேலாமல் மேவி
இருக்கச்சின்னசாமி யென்பவன்வெகு பாவி-ஆனு

31-இராகம்-சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி.

என்னத்துக்கிந்தக்கோடம் இதிலுனக்கென்னலாபம்

அநுபல்லவி.

அன்னத்துக்கும்வஸ்திராதிகட்கும் திரிந்
தலைவதுமனம் கலைவதுந் தெரிந்-தென்

சரணங்கள்-

வாலியையமறைந்திருந்தம் பெய்துவதைத்தவனென்றேனு
வந்தகாரனைக் கண்டொருகாலைப்பினவைத்தவ னென்றேனு
சூலிமுதலோரைதுரத்தியும்பாணு சுரனைவென்றனென்றேனுவீணு
உலகைப்படைத்தளித்ழிக்கும்வெளியூர னென்றேனு
உற்றாரும்பெற்றாரு மில்லாதவனொண்டிச்சார னென்றேனு
அலகிலண்டங்களிலும் பின்னமாயுமலக்ஷபமென்றேனு வின்னம் என்
செகத்திற்பொதுவாகியாக்கர்வேவரைக்கொய்தவ னென்றேனு
தேவர்க்கமுதந்தந்த சுரரைமோசஞ்செய்தவ னென்றேனு
அகத்திற்குடியிராமற்போனாலும் அழைத்தபோதும்வாராமலானாலும்
தாடகைகாரிகை யென்றறிந்துஞ்சங்கரித்தவனென்றேனு
ஜாரசோரசிகாமணியென்றுபேர்பெற்றவனென்றேனு [கும்
நாடகமாடுஞ்செகன்னாரிதனக்கும் நட்டுவனென்றேனு நாதனேயுனக்

மாமன்மீதம்பைவிடுத்தவன் வானரப்படையனென்றேனு
மாமனைக்கொன்றவன்மாடாடுமேய்த்தவனிடையனென்றேனு [என்
சேமமிகும்பரந்தாமனேபோதும் சின்னசாமிதாசனென்பவன்மீதும்

32-இராகம்-ஜிஜோடி-ரூபகதாளம்.

பல்லவி.

ஏழையின்மீது கருணையேன்வாராது

அநுபல்லவி.

தாழையிலுமொரு சற்குணமுண்டந்தத்
தகைமைபோலொருத்தமங்கண்டுமிந்த • ஏழை

சரணங்கள்.

பதங்களைநாடிவணங்காத பானுசேயைத் தேடி
மதங்கமலையில்வந்தரசிந்த
மன்னவனென்றுவணங்கிக்கையேந்த ஏழை

பிடியவலுண்டுகுசேல பிராம்மணனைப் பண்டு
படியிலதிகபாக்கியவானென்னப்
பண்ணியபுண்ணியகண்ணியபிரபன்ன ஏழை

அந்தணனுக்கன்று பசுக்களை அளித்தவனென்று
சந்ததமுமெச்சரித்துஞ்சின்னசாமி
தாசன்செய்ததப்பிதமென்ன ஏழை

33-இராகம்-சௌராஷ்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இதுவாசொல்லுவேனின்னமெத்தனையோசொல்லுவேன்
எனதுமனது நொந்தால்

அநுபல்லவி •

பொதுவானதெய்வமென்றுபோற்றிய ரஞ்சனையில்
புகழப்புகழமேபுரிகின்றவஞ்சனையில் இது

சரணங்கள்.

தாய்மொழியினைப்பரிபாலனஞ்செய்ய வென்று
தந்தையைதளரவிட்டுவனவாசி யானவன்
வாய்மாத்திரம்வாழைக்கனிகைகருனை யென்ற
வகையறிந்துவிடாமல் மதிமோசம்போனவன் இது

அக்கினியைச்சுடுமெங்களன்னையைக் கெறுப்பத்துடன்
அரணியந்தன்னில்விட்டுவரும்படிப் புரிந்தவன்
முக்கியக்கருணைக்கடலென்றுறுதியாக நம்பி
மோசம்போனத்திவுலகமேசவயி றெரிந்தவன் இது
உங்காரஞ்செய்தடுமை கங்காதரனை பயந்
தோடச்செய்தவன்ன்பர்க்குதவுவானென்று செல்லும்
சிங்காரப்பேச்சிங்கேசெல்லுமோசெல்லா தென்று
சின்னசாமிதாசன்பிரசித்தமாயிப்போது சொல்லும் இது

௩௪-இராகம்-சௌராஷ்டிகம்-அடதாளம்.

பல்லவி.

இத்தனையுமிராமநாமப்பிர பாவமே
இதுவேபவாம்புதி நாவமே

அநுபல்லவி.

முத்தனுந்தருமாதிமூன்றும் படைப்பதும்
மூஷிகவாகனுக்குமுதற்பூசை கிடைப்பதும் இத்

சரணங்கள்.

சுப்பிரமண்ணிய னன்றுதாரக னோடு
சூரபதுமனையுங் கொன்றதும்
சுரசேனுபதியானதுஞ்சில ரவனியில்
தொழுதுதுதித்துத்தெய்வ மென்றதும்
இப்பிரபஞ்சத்திலிருடிக ளெள்ளாரும்
இந்திரியாதிகளை வென்றதும்
எங்கும்புகழசிரஞ்சீவியாய் வீடணன்
இலங்கேசனுயிருக் கின்றதும்
முப்புரத்தரக்கரை முக்கண்ணன் கெலித்ததும்
முனிகுமாரனுக்கு மொழிந்தது பலித்ததும்
சுப்பிக்கொண்டாலாலங்கனலாய் சொலித்ததும்
கரத்திலடங்கியுண்ணக்கழுத்தினி லொலித்ததும் இத்
பிரமனுலகமெல்லாமளிக்குமதிகாரம்பெற்றதும்வரந்தருஞ் சத்தியும்
பெருமுனிவால்மீயென்பதும் கோசிகன்
பிர்மரிஷியான வெற்றியும்
பாரத்துவாசமுனிவிருந்து செய்ததுமிக
பாமுங்கொடுக்கவரும் பத்தியும்
பாவஞ்செய்தவருக்குமிறக்கும் போதுகாசி

பட்டணத்திற்கிடைக்கும் முத்தியும்
சிரமமில்லாமலுறுந்திவ்விய ஞானமும்
சித்தசுத்தியுங்கண்டுதெளியுநி தானமும்
நிமாமுனமனீபாவந்தெரிந்துசெய்யுங் கானமும்
நேகாந்தத்திலடையுந்தேஜோமய வானமும் இத்

அம்பரமணி முதலொன்பது பேருக்கும்
அபரிமிதமகிமை யுற்றதும்
ஆகண்டயின்முதலாந்திசைப் பாலரும்
அந்தந்தவதிகாரம் பெற்றதும்
கும்பமுனிவனுத்திப் புனலங்கைக்
கொண்டொருகுடியாய்க் குடித்ததும்
கொடுமைசெய்யுமநாதியாம்வித்தியா பாசங்
கொஞ்சமிருந்தது மற்றதும்
தம்பத்தைப்போல்மனந்தானுன பாக்கியமும்
சாங்கியதாரகசாதனை யோக்கியமும்
செம்பதுமக்கண்ணன்றிடஞ்சொன்ன வாக்கியமும்
சின்னசாமிதாசன்சீர்பெற்ற சிலாக்கியமும் இத்

௩௫-இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

கண்ணிகள்.

நிலத்தைப்பொருளறியுநிலமதை யறியாது
நிச்சயமிந்தநிலஞ் சடமே
நிலத்தைப்பொருளறியுஞ்ஜலமதை யறியாது
சத்தியமிந்தஜலஞ் சடமே
தேயுவைப்பொருளறியுந்தேயுவதை யறியாது
திண்ணமிந்தத்தேயுவுஞ் சடமே
வாயுவைப்பொருளறியும்வாயுவதை யறியாத
வண்ணமுண்மைவாயுவுஞ் சடமே
ஆகாசமதையறியாது திசையறியு
மாகையாலாகாசமுஞ் சடமே
ஏகாகாரமாம்நிஷ்பிர பஞ்சமா
இருப்பதுவேயெனக்கிருப் பிடமே
சகலங்களையும்பொருளறியுமந்தப் பொருளைச்
சகலமுமறியாது தத்துவமே

இகபரங்களெனுமிரண்டுசெனை யகற்றி
யிருப்பதுநல்ல மகற்துவமே
இன்னதுதன்னிலையென்றறிந் திருப்பவ
ரினியொருதேகமு மெடுக்காரே
சின்னசாமிமதமறியாத வரைப்போற்
றேசநாமங்களை யடுக்காரே

36-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவேளைவந்துவரந்தந்தருளுவாய் ராமா
ரவிகுல சோமா

அநுபல்லவி.

அந்தமிகுமுன்றனரவிந்தபதமே கதி
யல்லாமல்வேறில்லையடியேனுக்கென்று துதி
சந்ததமுஞ்செய்பச்சோதனைசெய்வதுசம் மதி
தாசரதிரகுபதிதயாபயோ நிதி-இந்

சரணங்கள்.

மந்திரங்களுக்குளுயர் மந்திரமுன்னும் மென்று
மகிதலமுறைப்பதற்கான் சாட்சி
மறைகளுந்தேடித்தேடியறியாதபரப் பிர்ம்ம
வஸ்த்துவென்பதற்குக்கரிவான் சாட்சி
சந்திரசூரியரொளியில்லாதவி டருளுந்
தனியென்பதற்குக்கண்டாகனன் சாட்சி
சாதிபேதமில்லாமலன்பரைப்புரப் பவனி
தானென்பதற்கந்தவிதுரன் சாட்சி
இந்திராணீசபிர்மனைரட்சித்ததற் கனேக
ரிஷிகள்சாட்சியாயிருப்பதாலகம் னோகத்
தொந்தரைசெய்யுமிந்தத்தரிதந்தொலைந்து போகத்
தொகுந்திதோவந்தேனென்றுவருத்தடியேன் முன்னாக இந்

எங்குநிறைந்தபரமாத்மாவென் றுலக
மியம்புவதற்குக்காயாதவன் சாட்சி
எவருக்கும்பெரியவனுனையன்றி வேறில்லை

என்பதற்காவிந்தபவன் சாட்சி
பொங்குமன்பர்க்குஸ்திபதங்கொடுபவ னென்று
புகலுவதற்கந்தத்துருவன் சாட்சி
பொன்னடிபணிந்தக்கணம்புரப்பவ னென்பதற்குப்
பூவைமணிசரமைகணவன் சாட்சி
இங்குமங்குமுன்மயமாயிருந்தாலும் வேதனைக
ஈசனைகவும்வந்தாலுமின்பமேதா மோதனைகத்
தங்குமனுமன்காத்திற்றுங்குமொரு பாதனைகச்
சகலஜெகம்புகழுஜானகி சமேதனைக இங்

மானத்தையபிமானமாயிரட்சிப்பவ னென்று
மாநிலஞ்சொல்வதற்குத்ரௌபதி சாட்சி
மலடியாலெலதையும்பாலனஞ்செய்பவ னென்ற
வார்த்தைக்குக்கௌதமசதி சாட்சி
ஆனதாசனைப்பிள்ளைக்கதிகமாய்ப் பார்ப்போனென்
ருருமுரைரபதற்குமாருதி சாட்சி
அரிவைதொண்டுசெய்தாலு முளங்களிப்பவ னெனும்
அதற்குச்சபரிபுண்ணியவதி சாட்சி
ஞானமிருந்துன்னடியில் நல்லபத்தியூறும் வகை
நானிலத்திலுன்பதத்தை நம்பினவர்கூறும் வகை
தானமுனக்கின்பமாகத்தந்து கடைத்தேறும் வகை
சந்தோஷமாகச் சின்னசாமிதாசன்கோரும் வகை இங்

37-இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமிப்படியலேபச் செய்வதில்
என்னலாப மையா

அநுபல்லவி.

பன்னப்பன்னப்பரமாநந்தரு முன்னைப்
பஜனைபண்ணிக்கொண்டிருக்கு மென்னைப்

சரணங்கள்.

நல்லசமயமிது பதந்தருவாயிந்த நானிலம்வாராமல்
அல்லதுதுரியா சிரமமளிப்பாயெனிலதனையுந் தாராமல்
இல்லறத்திலிருக்கி லிடரையுந் தீராமல்
சொல்லச்சொல்லக்கிருபை தொடங்கிப் பாரமல் இன்

உள்ளம்பரிசுத்தமாவதற் குபாயமுனதருளல் லாமல்
கள்ளத்தனமொழியாதென்றெண்ணியிருப்பதைக்கண்டும் வழிசொல்
எள்ளளவும்வகையென்ப தில்லாமல் [லாமல்
தெள்ளத்தேறமுனைச்சேர்ந்து நில்லாமல் இன்

ஒன்றியம்பும்போதொன்றைநினைக்குமிருளொழிந்திடச் செய்யாமல்
நன்றிருக்கத்தீதி லிழுக்குமிருகுணம்நசிக்கவேரைக் கொய்யாமல்
சென்றிடுமஞ்ஞானந் திரும்பினுந் தொய்யாமல்
வென்றிடுஞ்சின்னசாமிதாசனுய் யாமல் இன்

நடு-இராகம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

ரூபத்தைக்கண்டேனே மனஸ்தாபத்தைவிண்டேனே.

அநுபல்லவி.

தூபத்தையடுக்கும் பாபத்தைக் கெடுக்குங்
கோபத்தைத்தடுக்குந் தீபத்தைக் கொடுக்கும் ரூப

சரணங்கள்.

முந்தபத்மாசுரனாலேவலிக் காயில்
முக்கண்ணரோடிவந் தொளித்த
பந்தனையாலனந்தியசித்த னாகிப்
பாதத்தைநினைக்கக் களித்த
சிந்தைகொண்டுவந்தசிரனுந் திளித்த
தந்தனையங்கு தடாகத்திற் குளித்த
மந்தனைவென்றுமதிகெட்டு முளித்த
அந்தச்சிவனுக்குமபய மளித்த ரூப

பண்டசுரருஞ்சுரரும்வழக் காடும்
பருவந்தன்னைக்கண் டந்த
விண்டலத்திசனிதயத் தினல்வர
வேண்டநமக்கென்று முந்த
புண்டரீகபதம்பூண்டவளா யிந்த
மண்டலத்தில்வந்தவாறென்றெதிர் வந்த
கண்டகரைவென்று தொண்டராகுஞ் சொந்த
அண்டருக்கமுத மொண்டுமொண்டு தந்த ரூப

பன்னகபூஷணனந்தச்சொரு பத்தைப்
பார்க்கவேண்டுமென்று வேண்ட
மின்னலைப்போலப்பளபளவென் றெதிர்
விளங்கக்கண்டென்னை யாண்ட
பொன்னடிகளைப்புரகரன் றீண்ட
அன்னவன்கரத்திலண்டாமல் மீண்ட
தென்னசொல்வேன்பவவிருளைத் தாண்ட
சின்னதசாமிதாசன் சேவிக்கப் பூண்ட ரூப

௩௬-இராகம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி.

அய்யனைக்கண் டேனே
பரமானந்தங்கொண் டேனே

அநுபல்லவி.

வையகந்தன்னிலேவருத்தங்கள் தங்கள்
தெய்வமென்றுதுதிசெய்யும்பொரு ளெங்கள் அய்

சரணங்கள்.

மநந்தனக்கின்பமன்னவொருக் காலே
மண்டபமேமணிமயமாகை யாலே
அநந்தகோடியாதித்தனைப் போலே
அற்புதமானசிங்காதனத்தின் மேலே அய்

பாதனுதபத்திரந் தனைப்பின்
பக்கத்திலிருந்துபரிக்க வொளிமின்
மரகதமணிவண்ணங் கொண்டுசெகங்
மாதாவுடன்வந்தமாநிதியா மென் அய்

சத்துருக்கனவன்றமையனு மூந்தச்
சாமரம்வீசசதாகதி தந்த
சித்துருவறிந்தசெயனார விந்த
செங்கையில்விளங்குஞ்சீர்பதனுய் வந்த அய்

தங்கக்கிரீடம்பீதாம்பரமு மரும்
தண்டைசிலம்பாரஜாலத்துட னிரும்
அங்கதமுதலணிந்துகொண்டு வரும்
அழகிலதிசயாநந்தந் தரும் அய்

இத்தனைமின்னிர விக்கிகசமாய்
இருப்பவனென்றெவரு நிச்சயமாய்ச்
சித்தங்கொண்டோதவதீத வுதயமாய்ச்
சேவைதந்தவேளைதேஜோ மயமாய் அய்

ஆரியர்பொறிகளைந்துஞ் சமலத்தில்
அண்டவொட்டாமலடக்கி விமலத்தில்
சீரியருளத்திற்சேரு மமலத்தில்
தேறுஞ்சின்னசாமிசித்தக் கமலத்தில்

சும-இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்

பல்லவி.

வாரும்வாருமை கெருட வாகனனே
செகக் மோகனனே

அனுபல்லவி

ஆரும்பணியுமுன்றனரவிந்த பதநாடி
அநுதினமுந்துதிக்குமடியேன் முன்னேடி வாரும்

சரணங்கள்

பதிதபாவனநாமா சோதனைபண்ணுவ துனக்காமா
மிதிலைவல்லியுமாக் காத்திடவேணும் பரந்தாமா
கதிநீரேயென்றுனதுகமலபத மடுக்க
மதிகொண்டடியேன்நவாதந்துதி தொடுக்கச்
சதிசெய்யுமக்யானந்தானேவிட்டு விடுக்க
நீதியும்பரகதியும் நினைத்தவரங் கொடுக்க வாரும்

பிரமனுன்குமாரன் அந்தபினாகியுன் பேரன்
சுரருக்குமதாரன அகிலசுருதிக்குமதி காரன்
வரதனுநீயேயென்றுமனத்தில்நன்று யெண்ணிச்
சரணமடைந்தேனுன்றன்சரசிபதம் நண்ணிப்
பாதாதிகளஞ்சனைபாலன்கருணை கண்ணித்
தரணிமகள்சமேதனுகித்தயை பண்ணி வாரும்

என்னைமருவும்பாபம்தொலையாமலிருப்பதில்மனஸ் தாபம்
இன்னமென்மீதுகோபஞ்செய்வதிலென்னவுனக்குலாபம்

உன்னையன்றித்தெய்வமுண்டோவெங் கெங்கே
உன்னினும் நீயொருவனே யங்கங்கே
மன்னியிருப்பதாலே வரந்தருவதுன் பங்கே
சின்னசாமிதாசன்சொன்னவண்ண மிங்கே வாரும்

சக-இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

ராகவாயெனக்கெதி ராகவா
ரக்ஷணைசெய்திடப் பக்ஷமாயிக்ஷணம்

அநுபல்லவி.

ஏகமமனமாககம் பியதொண்டனென்
றெண்ணியனும்பை பண்ணிமுன்னாலே
பாகவதமணியா மிபராசனைப்
பாலனம்புரிய வந்ததுபோலே ராகவா

சரணங்கள்.

கேசனீசனும்நான்முகனும் கோர
நாராக்ஷசராற்கொண்டலச்சை பயந்தீரச்
சாகேதத்திலவதாரஞ்செய்துமார
சத்துருவில்லை யொடித்தெறிந்தவீர ராகவா

வசையில்லா ஜனவாரினிசைய
மந்தரமாவரங் களுமிசையத்
திசையிலந்தத்திசை மலையசையச்
செய்தவனையதஞ்செய்த விசைய ராகவா

கல்லாமிவனுள்ளங் கடினத்திலென்ன
காலுக்கிதமென்று கருதினற்சொன்ன
சல்லாபத்தை பருசரித்தசின்ன
சாமிதாசன் கதிதானென்னப்ரசன்ன ராகவா

சஉ-இராகம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

நிதிகமக்குதயாநிதியாமிராமன்சந்நிதி யென்று
துதிசெய்வாய்நெஞ் சமே

அநுபல்லவி.

இதிலிருக்குஞ்சுக மெதிலுண்டுவருத் தம்
ஓதுக்குஞ்சூதுக்கும்வாதுக்கும் சோதுக்கும்
இலக்கஞ்சரி விலக்கஞ்சரி
கலக்கஞ்சரி துலககஸ்தெரி நிதி

சரணங்கள்.

அதிபதிரகுபதிகதி யவன்பதகஞ்சம்
அதைவிடவேறுண்டோ நமக்குத்தஞ்சம்
முதூரன்போடாருனை முகத்தவருக்குமஞ்சம்
முகத்தவன்கிரிகைக்குமுறைத்து நெஞ்சம்
அதிசயானந்தமடையும்வகை நஞ்சம்
அமுதமானதறிந்துமன்ன வஞ்சகம்
கொதிக்குநரகமிகப்பொல்லாதென்று கொஞ்சம்
கூடப்பயமில்லையேகபட புஞ்சம்
மதிகெட்டதனத்தாவிப்பிர பஞ்சம்
மருவுமாயைவிட்டாலென் பஞ்சம்
சதிசெய்யாதேநல்லதியிதுவினை வெல்லச்
சாற்றுவாய்ப்பயமாத்துவாய் தொழு
தேத்துவாய்தினம்போற்றுவர் முழு நிதி

விரும்பும்வயதபரிக்குங்கால லீலை
விதமறியாமலலை வேலை
துரும்புபோலுஞ்சுழன்றடிக்கும்பெருங் காலை
துன்னுமிலதூலம் போலாலை
கரும்புபோலேர்தழுலைக்கு மூலை
கரைகடந்தேகாமற்கருஞ் சோலை
சுரும்புபோலன்பர்சொல்லாந்திரப்பட்டுப் பாலை
சுவைகண்டன்போடுண்டு நன்னூலை
திரும்பத்திரும்பப்படித்தொரு மாலை
சோத்தியானஞ்செய்வாய் திருமாலை
அருட்புண்டரீகச்சாலிரும்புண்ட நீரைப்போல்
ஆக்கவுந்தாநாக்கவுங் குரை
நீக்கவுஞ்சுகந்தேக்கவும் நிற நிதி

என்னநிரந்தரமாயுனக் குபதேசம்
இயம்பினுலும்நல்ல விசுவாசம்

இன்னமுண்டாகாமலிருப்பது மோசம்
எப்போதுதானுனக்கவ காசம்
சொன்னவகைசெய்தால்தொலையுமாசா பாசம்
சுகமுண்டாமப்பனுக்கிது நேசம்
சின்னசாமிதாஸன்சொல்லுமுச்ச நீசம்
தெரியாதவருக்கின்பம் பிரயாசம்
துன்னுந்துரிதமென்பதை நாசம்
சூடுசதாநந்தப் பிரவேசம்
பொன்னடியிலடிமைமன்னவின் சொடுமை
புத்திநீங்கிடப்பத்தி யனுபவ
வெத்தியாய்ப்பிரசித்தியாய் நவ நிதி

சங-இராகம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி.

ஆனந்தரூபனேயதிகப்பிரதாபதாபனே ஆதித்தகுலவதீபனே

அநுபல்லவி.

மானந்தந்தைவர்மா தைக்காத்தவன்வடா
தேனந்தவாறென்றனை ரட்சிக்கக்கூடா தான்

சரணங்கள்.

சபரியெச்சிலுண்டகந்தாயே அ
சாமிளனுக்குங்கதி தந்தாயே
இபராசன்கூவமுன்வந்தாயே அவ்வா
றென்னையுமாட்கொள்வா யெந்தாயே
அபயமென்றனுக்கருளி நிரதமும்
அதிசயாநந்தமடையுஞ் சரதமும்
சுபமிடும்பரிசுத்த விரதமுஞ்
சொன்னவகைதொகுத்திடா வரதமும் ஆன

உன்னையல்லாமல்வேறே தைய்யா
என்மீதுனக்குத்தானென்னவா தைய்யா
என்னைக்குறித்ததையோதய்யா உன்றன்
எழிலடிச்சேர்வதெப்போ தைய்யா
அன்னைவயிற்றினிவின்னமுஞ் சேரும்
அவஸ்தைப்படுங்கொடுமோபத்தைத் தீரும்
தன்னைநிகர்வெளிப்புகையாவதைப் பாரும்
தரையுஞ்சூட்டையாவரந் தாரும் ஆன

உள்ளகாலுமிந்த யாதனையாகல்ல
துன்னைநம்பியுமின்னம் வேதனையா
எவ்வளவுங்கிருபைக்குஞ் சோசனையா அரு
கிருப்பவர்கள்செய்த போதனையா
விள்ளும்வாக்குக்கும்வினைவிடுஞ் செவிக்கும்
விருப்பந்தரும்பலவிதமாகுங் கவிக்கும்
தெள்ளமிர்தமெனச் சிந்தையைக் குவிக்கும்
சின்னசாமிதாசன்சேர்ந்தனு பணிக்கும் ஆன

இராகம்-பியாகடை-ரூபதாளம்

பல்லவி.

எல்லாமிராமமயம் என்றிருப்பவர்க்கென்னபயம்

அநுபல்லவி.

பல்லாயிரகோடி பண்டங்கள்
பகிரண்டங்கள் நவகண்டங்கள் எல்

சரணங்கள்.

வேதமும்பஞ்சபூதமும் வானோர்
விதியுடனுமாபதிமுத லானோர் எல்
நதிநதங்களும்நற்புனற் செல்லாதும்
நல்லதுஞ்சொல்லாதுஞ்சொல்வதுஞ் சொல்லாதும் எல்
அணுவுக்கணுவாயகத்துக்க சுமாய்
அங்கங்கிருப்பதை அறிந்து சுகமாய் எல்
எள்ளுக்குளெண்ணெய் போலே
எங்குநிறைந்திருப்ப தாலே எல்
இங்குமங்குமெங்கும்வெளி போல்
ஏகரூபமாகை யினால் எல்
நாலோடிருவர்க்கம் நரகஞ்சொர்க்கம்
நம்பும்பெரியோர்கள் நண்ணும்ப வர்க்கம் எல்
நாலுபலங்களும் நாலுகதி களும்
நாலிருசம்பத்தும் நவநிதி களும் எல்
எண்ணமுதமதனை லெய்துமகத் வமும்
இருபத்துநாலென்றியம்புந்தத் வமும் எல்
அவனையன்றியோரணுவுங் கொஞ்சமும்
அசையாதுமறிந்தமுத நஞ்சமும் எல்

கூடலுந்திசையுங்கவியு மிசையும்
க்திர்மதிமேகங்கால விசையும் எல்

சத்தாகிச்சித்தாகிச்சச்சிதா நந்தமாய்த்
தானேயானசின்னசாமிபோ லந்தமாய் எல்

சரு-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

திருமுக்கூடலிற் றீர்த்தமாடி நானேபழைய
சீவரத்தைக் கண்டேனே

அநுபல்லவி.

ஒருமுக்கூடலுமைத் தொருமுக்கூடலும்போக
இருமுக்கூடலையு மிழிந்துபுனிதனாக திரு

சரணங்கள்.

குவலயத்திற்சிறந்த குத்தனூரில்நின்று
விவகாரப்பதமெனும் வெங்களத்தூர்சென்று
அவமாகுங்காமப்பாலாற்றைக்கடந்தோ மென்று
தவப்பகையாசினவிஷாற்றையுந் தாண்டியின்று திரு

ஆசையாம்வேகவதியாற்றையுந்தாண்டி விட்டு
மாசுதவுமோக்கச்சிமாநகர்புறப் பட்டு
வாசமதாதிதண்டு சீவரம்வட்டின்னமும் நட்டு
காசினியில்வாராத சங்கற்பம்பண்ணினதைத் தொட்டு திரு

சொன்னப்பொருளறிந்து சுத்தசித்தராய்ப் பண்டு
துன்னும்பவமொழிந்து சுகரூபனாகும் விண்டு
பொன்னடிகளிற்றிரண்டு புரிவார்களென்று கண்டு
சின்னசாமிதாசன்தெரிவித்தாகந்தங் கொண்டு திரு

சகூ-இராகம்-கல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

வரதாவரந்தரவேணும் வந்துதரிசனந் தரவேணும்

அநுபல்லவி.

மரகதமணி வண்ணனே கண்ணனே
மாயனேசெங்கனி வாயனே தூயனே
சாதமாகநின் சரணபக்தியைத்
தாருமுன்வாருஞ் சொல்தேருங் கண்பாரும் வா

சரணங்கள்.

பண்டந்தரங்க பக்தனு மாவிந்த
பவன்செய்தபரிமேதந் தனிலிந்த
மண்டலமீடேறவந்த வைகுந்த
வாசனேயாளு மென்றந்த
விண்டலத்தண்டருந் தண்டகமண்டலங்
கொண்டவருமாகண்டலங்காள
கண்டனுந் தொண்டருங் கண்டுதுதிசெய்யுங்
காரண காரண நாரண வாரண! வா

அந்தணர்தேடி யன்புடனேநாடி
யனைவருங்கூடி யருமறைபாடி
வந்தனஞ்சூடி வணங்கிக்கொண்டாடி
மாரசகஸ்திரகோடி
சுந்தரனேகம்பு சுந்தரனேராம
சந்திரனேயென்று சந்ததம்புகழ
மந்தநகைக்கோடி மதிபோற்றுலங்க
லந்த கோவிந்த முகுந்த முசுகுந்த வா

உன்னையன்றித்தெய்வமில்லையென்றுவேத
முபநிஷத்து முரைத்திடப்பேதந்
துன்னுமறியாத மூடர்கள்வாதஞ்
சொல்லுவதென்ன விநோதம்
பன்னகசயனு பன்னசரண்ணிய
மன்னும்பரந்தாம னென்னுந்தயாகா
சின்னசாமிதாசன் சித்தத்தில்வாழ்பெருந்
தேவியை மேவி யுலாவிக் குலாவிய வா

சஎ-இராகம்-கமாஸ்-ரூபகதாளம்.

பல்லவி.

பச்சைவண்ணனே பங்கயக்கண்ணனே துரையே

அநுபல்லவி.

நச்சையுண்டவன்பிச்சையைத் தடுத்த
இச்சைவைத்தாலிந்த லச்சையே தடுத்த பச்

சரணங்கள்.

எந்தனையாளாயோ வந்தனைக்கேளா யோ
சந்ததமும்பத சிந்தனைசெய் தேனே
நிந்தனையாகவு முன்றனைவை தேனே பச்

மர்மமறியாயோ தர்மங் குறியாயே
துர்மதியைத்தரும் கர்மத்தை நீக்காயோ
வர்மம்விடுத்தென்னை நிர்மல னுக்காயோ பச்

நன்னயமாகாதோ பன்னவும் போகாதோ
பொன்னடிக்காளென்று சொன்னவ ல்லவோ
சின்னசாமிதாசனின்னமுஞ் சொல்லவோ பச்

சஅ-இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

காணுமலரைக்கணம் பலயுகமாகுதே
கலங்கிமனம் நோகுதே

அநுபல்லவி.

சேணுளுமவனயன் சிவனும்பாவனே
செய்யுங்கீதசோமயனே தேவாதிதேவனே காணு

சரணங்கள்.

அமலகுலத்திற்பிறந்தவளாமிவள்நமக்
கானவளென்றெண்ணி
ஆடையாபரணங்களதிகமாயளித்ததது
மல்லாமல்தயைபண்ணி
கமலகாத்தினுலென் கழுத்தினிற்றுலியைக்
கட்டிவலதுகை பிடித்தவனமாலியை காணு

பரபுருஷரைச்சொப்பனத்திலும்நினையாத
பதிவிரதையாமென்னைப்
பஞ்சபாணனெங் கணையாலெய்வதைப்
பார்த்தடியாள்முன்னை
சரசமாகவந்துத் தழுவாதப்பயனை
சாற்றவும்வாராத சதானந்தமயனை காணு

மெய்யாகத்திரண்டவ ளன்றுகைதட்டிவைத்த
மின்னினடையதுபோகம்

வேடிக்கையாயிருக்கா தெனிலெனக்கிந்த
விரகமேது நிமேஷகம்
செய்யாமலிருக்கின்ற திவ்யகுணாளனை
சின்னசாமியெனுந் தெரிவைமணாளனை காண

சக-இராகம்-கல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

சாரதியேகருணாசரதியே கதியென்று
சரணமடைந்தவர்க்குவருஞ் சீரதியே

அநுபல்லவி.

சாதீசபார்வதீசபாக சாசனுதிசர்ச்சன
பட்சகடாட்சவற்சலதுர்ச்சன
சிட்சகரட்சக வட்சரவர்ச்சுன சாரதி

சரணங்கள்.

பாஞ்சாலியினுடையைவாங்கப்பாவிதுர்ச்சாதனன்முனைய
காஞ்சனமலையனையமுலைகள் கண்ணீர்பெருக்காலநனைய
பாஞ்சசன்னியாதியேற்ற பஞ்சாயுதனேயென்றுபோற்ற
வாஞ்சைவாயபிமானங்காத்தவரதனேமணிவண்ணனேபார்த்த சாரதி

அன்னிதத்துக்கஞ்சாதகஞ்ச ஞதிகளனிசமுங்கலகந்
துன்னியவாறறிந்துபாரஞ் சுமக்காதலைந்திடுமுலகந்
தன்னியமாகுமருள்பூண்டவதாரஞ்செய்தப்பாரநந்ததாண்டவ
வன்னிக்கபயமாகக்காண்டவவனத்தையளித்தமத்தியமபாண்டவ சார

திருவல்லிக்கேணியினில்வாழுந் திவ்வியரூபனேயுனது
திருவடிகளையநவரதமுந் தியானஞ்செய்வதேயெனது
விருப்பமமர்களத்தில்மகாரதவீரனே விசுவசொரூபத்தைபார்த்
திரும்பிப்பாரென்றுகாட்டும்விசாரதசின்னசாமிதாசன்சேருமனோரத

ருய-இராகம்-கமாஸ்-அடதாளம்.

பல்லவி.

ஆரந்தராமனை யடுத்தவர்க்கார் நிகராவரர்

அநுபல்லவி.

கர்னந்தனில்வெகுகாலமுதற் கொண்டு
கல்லாயிருந்ததும் பண்டு
காரிகையானதைக்கண்டு களிப்புண்டு ஆநந்

சரணங்கள்.

சத்தியதெய்வந்தாசாதி யென்று
சது-மறைகளு மோலம்
தானிடுவதுவிலாசம் சதாகாலம் ஆநந்
நித்தியநைமித்தியக் கருமாதி
நிகிலமுமவ னென்று
நினைத்தரிகளைவென்று நிலைநின்று ஆநந்
நெற்றிக்கண்ணனத்தி முகாதிகள்
நிரந்தரமுங் கொண்டாடும்
நிசத்தையறிந்துகூடும் நெஞ்சத்தோடும் ஆநந்
அன்பருமாதவருந் திருமாலே
ஆதிதெய்வ மென்றத்தாலே
அதிசயித்தார்புவிமேலே அதுபோலே ஆநந்
சித்தமகிஅந்துவேதாந்த சித்தாந்தத்தை
சின்னசாமி தாசனேனும்
சிரறிந்துள்ளந்தப்பாதஞ் செய்தெப்போதும் ஆநந்

ருஉ-இராகம்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

அகப்பட்டதையா ராமநாமம்
அகப்பட்ட தையா

அநுபல்லவி.

சுகப்பட்டுவாழச் சென்மாந்தர
சுகிர்தத்தாலகில முந்தாந்தர அகப்

சரணங்கள்.

அந்தாணமநுமானுக்குந்தொல்லுலகத்தைப் படைத்தோனுக்கும்
சுந்தசிலைக்குமவள்கோனுக்கும் மகப்பட்டபடியடியேனுக்கும் அகப்
சுகசோசிகருக்கொருக்காலேசுகந்தந்தருளக் கிடைத்ததுபோலே
அகஸ்திடசுதிஸ்டருக்கன்பாலே அகப்பட்டவாறையனருளாலே அகப்

கனககசிபுகுமாரனுக்குங்கங்காநதியோடக் காரனுக்கும்
அனகபாரதவீரனுக்குமந்தவண்ணமிந்தத் தீரனுக்கும் அகப்
புத்திரிநிநுதித்தபுண்ணியனுக்கும்புகழுஞ்சுப்பிரமண்ணியனுக்கும்
அத்திமுகலாவண்ணியனுக்கும் அகப்பட்டதிந்தகண்ணியனுக்கும் அக
நாரதனுக்கும்விபாசனுக்கும்நன்குதவுமிலங் கேசனுக்கும்
சீருதவுந்தியாகராசனுக்கும்சின்னசாமி தாசனுக்கும்-அகப்

ருஉ-இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

மாதவப்பதமே மாதவப்பதமே

அநுபல்லவி.

ஆதவகுலத்திநு மந்த
யாதவகுலத்திலும் வந்த மாத

சரணங்கள்.

சிவனுக்கும்வாசவனுக்குங் கஞ்ச
பவனுக்குமனுபவவசிஷ்பிர பஞ்ச
தேஜோமயமா யெங்கும்
ஓஜோமயமாய்த் தங்கும் மாத
வேதத்துக்கும்பஞ்சபூதத்துக்கு மாதி
நாதத்துக்குஞ்சதாதீதப்பரஞ் சோதி
விண்ணவரும்பண்ண வரும்
சுண்ணவருமெண்ண வரும் மாத
சுருதிசொல்லும்பொருளி தென்று
பரிதிசொல்லக்குருவாய்ந் தன்று
சொன்னசாமிதன்னைக் கண்ட
சின்னசாமிசேர்ந்து கொண்ட மாத

ருங-இராகம்-நாதநாமக்கிரிகை-அடதாளம்.

கண்ணிகள்.

தாரகநாமத்தைமறவோம் மறவோம்
தரணியிலினிப்பிறந்திறவோ மிறவோம்
மாரகபயத்தைநாமடையோ மடையோம்
மங்களபதத்தைவிட்டிடையோ மிடையோம்
சமமாகச்சர்வமும்பார்ப்போம் பார்ப்போம்
சந்தித்தோரசங்கையைதீர்ப்போந் தீர்ப்போம்
எமனுக்குப்பயப்படமாட்டோ மாட்டோம்
இந்திரபதவிக்குங்கைநீட்டோ நீட்டோம்
இனியெங்களைமறந்துதுஞ்சோந் துஞ்சோம்
எவருக்குமினிநாங்களஞ்சோ மஞ்சோம்

மனிதரையொருக்காலும்நம்போம் — நம்போம்
மனமலைந்தினிநாங்கள்வெம்போம் — வெம்போம்
மங்கையரைக்கண்டுமயங்கோம் — மயங்கோம்
மதிகெட்டுலகமேசத்தியங்கோம் — தியங்கோம்
கெங்காதிநதிகளுக்கோடோ — மோடோம்
காமிகள்சூழுவழிநாடோம் — நாடோம்
பிர்மாதியுரையைவிள்ளோம் — விள்ளோம்
பிர்மம்வேறெண்ணங்கொள்ளோம் — கொள்ளோம்
கர்மத்தைநிலையாசப்பண்ணோம் — பண்ணோம்
காயத்தைநிலையென்று மெண்ணோ — மெண்ணோம்
அரிதாசர்நாரென்றுசொல்லோம் — சொல்லோம்
அந்யாயமார்க்கத்திற்செல்லோம் — செல்லோம்
மரியாதைகளையும்விட்டகலோ — மகலோம்
மனகோசக்கொடுமுறைபுகலோம் — புகலோம்
இனத்தோடுபரிசுத்தராணோ — மாணோம்
இத்தனைநாளறியாமற்போனோம் — போனோம்
சினங்கொண்டுவைதாலுங்கறுவோம் — கறுவோம்
சின்னசாமிசெல்வம்பெறுவோம் — பெறுவோம்

௫௪-இராகம்-சஹாநா-ஆதிதாளம்.

பல்லவி.

கிஷ்ணநாமகீர்த்தனைசெய்பவ — ரடிக்
கீழடிப்பொடியேநல்லகெந்தப் — பொடி

அநுபல்லவி.

விஷ்ணுவாணையால்வேதமு — மோதா
விஸ்தாரமகிமையைமேவிய — ராதா கிஷ்ண

சரணங்கள்.

சந்ததமந்தமுகுந்தன் — பாதார
விந்தமேகதியென்றுவந்தனம் — செய்யும்
அந்தமிகுந்தவரடிப்பஞ்சகமே — நல்ல
சந்தனமென்றுசாந்தருள் — பெய்யும் கிஷ்ண
ஒருமலையும்நிகராகாம — லுயர்ந்த
திருமலையில்வாழும்சோமத்தி — லந்த
மருமலர்மேவியமல்ரடிநினைப் — பவர்
திருவடித்தீர்த்தமேதீர்த்தங்க — ளானந்த கிஷ்ண
தங்குமுலகுக்கெல்லாந்தாயாமலர் — மேலு
மங்கைமணாளன் மலரடியினிற் — றங்கள்
செங்கையினலர்ச்சிப்பவர்பாத — சைரட்
பொங்குமானந்தசிரோபூஷணமா — மெங்கள் கிஷ்ண

பன்னகபதிமலைதன்னில் வாழுமா
பன்னசரண்ணியன்பத்தர்களுக்குக் குடை
அன்னங்கொடுத்தாராதிப்பவர் பதமே
சின்னசாமிதாசன்செனமவிடாய்க்குக் குடை கிஷ்ண

௫௫-இராகம்-சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

பரியாசமாவதரிநாமமகிமையைப் பார்த்துப்
பஜனைபண்ண லாகாதே
தெரியாமலுந்தெரிந்துசெய் பாதக மெல்லாந்
தீயில்பஞ்சனவெந்து போகாதே
இரும்புமபோது தும்பும்போதப்பா வென்பதை
இராமாகிருஷ்ணுவென்னக் கூடாதா
திரும்பலினுல்வந்தபாதக ராசிகள்
சீக்கிரத்தில்பறந் தோடாதா
தவரிவிழும்போதப்பப்பாவெனும் நாக்கு
தசரததநயவென்ருே தாதா
புவனத்தில்ஜென்மமெடுத்தவா கடத்தேறப்
புகனுநாமமீதொன்றே போதாதா
இடரும்போதம்மம்மாவெனும் வாக்கில்
இரகுபதியெனுமுரை வாராதா
படருமஞ்ஞானகருமபந்தத் தீராதா
வாக்கியங்களும்வந்து சேராதா
மூச்சுப்பிடித்தபோதையோவெனும் வாக்கு
முகுந்தகோவிந்தவென்று கூருதா
ஏச்சும்பேச்சுங்கேட்கப்பண்ணுமருபைப் பிணி
என்பதொழிந்துமதி தேருதா
பரிந்திந்தவாறுரைத்தாலும் ராமநாமம்
பாவத்தவெல்லும் விதந்தானே
தெரிந்தசின்னசாமிதாசனு லெவருக்கும்
தெரியச்செய்தவினங்கள் பெருமானே

௫௬-இராகம்-எமுனகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

ராமா ராமா வென்று சொல்லு சொல்லு
காமக்குரோதங்களைக் கொல்லு கொல்லு

அநுபல்லவி

பூமாதுநாதனைப்புல்லு புல்லு
புண்ணியகதையிற் செல்லு செல்லு
ஏமாறுமல்நிலை நில்லு நில்லு
இந்திரியங்களை வெல்லு வெல்லு ராமா

சரணங்கள்.

மறப்புநினைப்பைத்தள்ளு தள்ளு
மதியோடுநேசங் கொள்ளு கொள்ளு
பிறப்பிறப்பையும்விள்ளு விள்ளு
பேரின்பமடைந்து துள்ளு துள்ளு ராமா
சாதனத்தொழிலைபண்ணு பண்ணு
சாமிகுணங்களை எண்ணு எண்ணு
ஓதனப்பையிதுமண்ணு மண்ணு
ஊகித்திராமனை நண்ணு நண்ணு ராமா
தத்துவக்குப்பையை நீக்கு நீக்கு
சாஸ்திரபொத்தலைப்போக்கு போக்கு
சத்துவகுணத்தை நோக்கு நோக்கு
சத்தாநந்தத்தை தேக்கு தேக்கு ராமா
தன்மயமென்றதைப் பாரு பாரு
சஞ்சலமென்பதைத் தீரு தீரு
சின்மயப்பதமே சீரு சீரு
சின்னசாமிமதஞ் சேரு சேரு ராமா

ருஎ-இராகம்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

ராமபாணமே பாணம்
ராமக்கல்யாணமே தத்துவம்

அநுபல்லவி.

ராமதத்துவமே தத்துவம்
ராமமகத்துவமே மகத்துவம் ராம

சரணங்கள்.

ராமாவதாரமேயவதாரம் ராமவீரமே வீரம்
ராமநாமசாரமேசாரம் ராமதீரமே தீரம் ராம
ராமரூபமேரூபம் ராமப்பிரதாபமேபிர தாபம்
ராமகோபமேகோபம் ராமதீபமே தீபம் ராம
ராமபிர்மமேபிர்மம் ராமார்ப்பிதகர்மமே கர்மம்
ராமார்ப்பிததர்மமேதர்மம் ராமனையறியமர்மமே மர்மம் ராம
ராமகருணைசீதமேசீதம் ராமப்பிரசாதமே பிரசாதம்
ராமசரித்திரகீதமேகீதம் ராமயமாகும்போதமே போதம்-ராம
ராமனைத்துதிக்குந்தினமேதினம் ராமனைநினைக்குமனமே மனம்
ராமனையடுக்குங்கனமேகனம் ராமபக்தியாகுந்தனமேதனம்ராம
ராமநிவாசபூமியேபூமி ராமாக்கினைநேமியே நேமி
ராமதிவ்யநாமியேநாமி ராமனுக்கேயடிமை சின்னசாமி ராம

ருஅ-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அய்யனேயருள்செய்யவேணுமப்பா ராகவனே
அடியாரைராட்சிக்குங்கருணைதப்பா ராகவனே
துய்யனேமழைமெய்யனேயென் துரையே ராகவனே
சுகமளிப்பதுன தரும்பொன்னடித்தாமரையே ராகவனே
சரசிஜபவனாதிகளுக்கபயர்தந்த ராகவனே
தசரதராஜன் தனையனாகவந்த ராகவனே
பரதாதிகளொடு திருவவதாரம்பண்ணிய ராகவனே
பண்ணவரும்விண்ணவரும்பணியும்புண்ணிய ராகவனே
பகலவகுலசேகரனென்றுலகம்பாடும் ராகவனே
பாலலீலைகண்டவனியெங்குங்கொண்டாடும் ராகவனே
சகலகலாவல்லபனாகியதாசரதி ராகவனே
சர்வலோகனுபசனனதாசரதியே ராகவனே
தாடகையைஸம்ஹாரஞ்செய்தவிசக்ஷண ராகவனே
சாந்ததாந்தசமதிகுணசுபலட்சண ராகவனே
ஆடகாம்பரதாகிலஜகதாதரா ராகவனே
அசலாதிபகிபதீரஜலதிகெம்பீர ராகவனே
காதிதனயயாகாரிஜாலகாலா ராகவனே
கமலாஸனாதிசுரமுனிசனாநுகூல ராகவனே
ஆதிநடுமுடிவில்லாதககனாகார ராகவனே
அகலிகைசாபமகலச்செய்தாகுவீர ராகவனே
உமாபதிசாரசனத்தையெளிதாயொடித்த ராகவனே
உத்தமோத்தமியெனுஞ்ஜானகிகைபிடித்த ராகவனே
ரமாபதிசாரசனத்தையபகரித்தராமா ராகவனே
நடுங்கும்பரசுராமனைத்துரத்தியபராந்தாமா ராகவனே
ராவணாதிகளைநாசஞ்செய்தாகுநாதா ராகவனே
நலமிகுமகுடாபிஷேகங்கொண்டசீதா ராகவனே
தேவரும்முனிவரும்பணியும்பாவனாதீதா ராகவனே
சின்னசாமியெனும்ரக்ஷிக்குமாநந்தபோதா ராகவனே

ருஆ-இராகம்-மணிரங்கு-ரூபகதாளம்.

பல்லவி.

ஒழிந்துபோமனமே எந்தனைவிட் டோ

அநுபல்லவி.

அழிந்துபோகுமாக்கை யிலக்ஷணம்
அறிந்தலைகின்றுயாஞ்யக விக்ஷணம் ஒழி

சரணங்கள்.

தத்தளித்துத்தகுந்குந் தகாதும்
மெத்தமெத்துன் றனைமவி யத்தாலோதும்

இத்தனைகாலமா யித்தரைமீதும்
எத்தனையோஜென்ம மெடுத்ததுபோதும் ஒழி

கரைகாணப்பவக்கடலிற் றோய்யாமல்
துரைராமன்பதஞ்சுகங்கண் டுய்யாமல்
உரைதடுப்பதாலுத்தம் பொய்யாமல்
அரைநிமிஷமுமாலஸ்யஞ் செய்யாமல் ஒழி

உத்தமபதத்திலூர்ஜித மாய்ச்செடி
வைத்தவன் தண்ணிரும்வாய்ப்பா னென்றுநொடி
அத்தனைபோதுமோ யாமலடிக்கடி
சத்மனுஞ்சின்ன சாமிசொன்னபடி ஒழி

சுக-இராகம்-புன்னாகவராளி-ஆதி தாளம். பல்லவி.

நம்மையாரென்ன செய்யலாமனதே

அநுபல்லவி.

இம்மைமறுமையிலுள்ளோர் தம்மைப்பொம்மைகளென்றெண்ணி
அம்மைஜானகிநாதனைச் செம்மையாய்நம்பியிருக்க

சரணங்கள்.

காமனையெரித்துமுதைத்தேமனை வென்றவனேதும்
நாமனைப்பரந்தாமனைநம்பியிருக்க நம்
வாணியநீசன்சருவாணி வாசவனுமிந்தி
ராணியுந்தொழுங்கோதண்டபாணியைநம்பியிருக்க நம்
பாவனைசெய்தானந்திக்குஞ் சிவனையானுமானு
பாவனைதேவர்க்குமாதிதேவனைநம்பியிருக்க நம்
ஆரணங்களும்காணாத காரணக்காரணனும்
பூரணம்பூரணனான நாரணனைக்கூடிவாழும் நம்
எள்ளுக்குளெண்ணெயைப்போ லுள்ளுக்குள்ளாயிருக்குந்
தெள்ளுமணியையரித்து தள்ளுமுள்ளஞ்சுகங்கொள்ளும் நம்
நல்லாரும்பொல்லாரும் மில்லாருமுள்ளாரும்
எல்லாமவன்மயமென் றுல்லாசமாயிருக்கும் நம்
யாக்கியவல்க்கியகுரு வாக்கியத்தைமறவாத
யோக்கியதையாலிந்தப் பாக்கியமடைந்திருக்கும் நம்
பன்னகபதிசயன பொன்னடிக்கடிமையான
சின்னசாமிதாசன்மத மின்னதென்றறிந்திருக்கும் நம்

கூஉ-இராகம்-தன்யாசி-ஆதிதாளம் கண்ணிகள்.

ஸ்ரீராமனேபரதெய்வமென்று துதிசெய்யதவனொரு கழுதை
தாரகநாமஸாரத்தை மனதிற்தரியாவனொரு கழுதை
கேசவன்கதைகளைநேசமா யொருக்காலுங்கேளாதவனொரு கழுதை
வாசவனரனயனும்வணங்கும்பதத்தை வணங்காதவனொரு கழுதை

நாராயணனேபரமென்றுறுதியாய் நம்பாதவனொரு கழுதை
பாராயணஞ்செய்யும்பாகவதர்களடி பணியாதவனொரு கழுதை
மாதவனுமமகிமையரிந்துமன மகிழாதவனொரு கழுதை
ஆதவயாதவகுலத்தவதரித்தோனை யடையாதவனொரு கழுதை
கோவிந்தனேபந்துவென் றொருதரமுங்கூறாதவனொரு கழுதை
மாவிந்தயாதிவிஷ்ணுசரித்திரத்தை மதியாதவனொரு கழுதை
மதுசூதனதிருவிக்கிரமவெனுமுறை வழங்காதவனொரு கழுதை
போதுவாகியவாமன ஸ்ரீதரவென்று போற்றாதவனொரு கழுதை
இருடிகேசபத்மனாபவென் றென்றிபம்பாதவனொரு கழுதை
திருமணுளதாமோதரமேயன்று செப்பாதவனொரு கழுதை
அன்னியமாதராசைக்கெடுக்கு மென்றறியாதவனொரு கழுதை
பொன்னிலம்பெண்டுபிள்ளை நிலையென்றுநம்பும் புத்திகெட்டவனொரு
மனைதனிலேநிறுத்தும்வகையறியாமல்மலைத்தலைபவனொரு கழுதை
தனதுள்ளாண்டவனையறியாமல்வெளியில்தனிக்கின்றவனொரு கழுதை
என்னபோதனைசெய்தாலும் துர்மதியையெரியாதவனொரு கழுதை
சின்னசாமிதாசன்மதபின்னமென்று தெரியாதவனொரு கழுதை

சூஉ-மங்களம்-இராகம்-சுருட்டி-ஆதிதாளம். பல்லவி.

ஆநந்தரூபனுக்குஜயமங்களம் அகத்தியாத்மதீபனுக்குசுபமங்களம்.

அநுபல்லவி.

தாநந்தவங்கருமஞ் சாஸ்திரங்களாலிலந்தும்
சந்தேகந்தீரும்போது தானாகவேவிளங்கும் ஆநந்

சரணங்கள்.

எங்குநிறைந்திருக்குமேகா காரனுக்கு
அங்குமிங்குங்கொண்டாடும்சகாய சூரனுக்கு
துங்கப்புகழ்பெற்ற கோசலைபெற்ற வீரனுக்கு
பொங்குமன்பர்கொண்டாடும்பூரணவ தாரனுக்கு ஆநந்
பாரதீசனம்பணிரிம்பானுக்குக்காண்டவ னுக்கு
நீரதிதந்தமணியைநிரசப்பூண்டவ னுக்கு
சீரதிகம்பெற்ற மத்தியமபாண்டவ னுக்கு
சாரதியாகிபசதாநந்ததாண்டவ னுக்கு ஆநந்
முன்னந்தவித்தான்செய்யமுதவிருந்துண்டவ னுக்கு
தன்னடிமைப்பார்த்தனுக்குத் தத்துவம்விண்டவ னுக்கு
சொன்னவாரடியேனுந் துதிக்கக்கண்டவ னுக்கு
சின்னசாமிதாசனைசேர்ந்துகொண்டவ னுக்கு ஆநந்

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தங்கள்.

மங்களகுணங்களுமிலங்குமுலகங்களொடுவங்கசைகமலனும்
வாசவனுமீசனுமேசனும்வியாசனுமொசறிபாராசரனுமே
புங்கவமதங்கசரபங்காளங்கனும்பொங்கனகாங்கசுகனும்
போதருமாதரவேகாவுமறியாதபூரணாநந்தரூபா

தங்கமலமறையுமறிவரியவுன்மகிமையைத்தமியேனுரைக்கவசமோ
சற்றுமறிவில்லாதசண்டாளாரமெனைத்தற்காப்பதெந்தவகையோ
செங்கமலமங்கைமுகபங்கயபதங்காரசிங்கமாதங்கவரதா
சிந்தாகுலந்தீருமெந்தாயுடன்வருஞ்செந்தாமரைக்கண்ணனே. ௬௪

உள்ளும்புறம்புமில்லாமலுலகங்களுக்குள்ளும்புறம்புமாகி
உருவிலாதவனுயநந்தரூபங்கொண்டுமொன்றாகிநின்றபொருளே
விள்ளுதற்கரியநின்மாயையாலுறகெலாம்வேறுவேறென்றுகாட்டி
விளையாடுவதையறிந்தின்பமடையும்போதுவினைவாதைசெய்கின்றதே
எள்ளுக்குளெண்ணெய்போலெங்குநிறைகொண்டுமெனதிருதயங்குறையு
முறையான், என்னதீவினைசெய்திருந்தாலுமிருளானதிரவிக்குமெதிரா
குமோ, தெள்ளுமறைமுடிவினிற்றேறுமாணிக்கமேநிசோமயாகார
மே, சிந்தாகுலந்தீருமெந்தாயுடன்வருஞ்செந்தாமரைக்கண்ணனே.

மீனுயருங்கடற்புனல்செதிளினிற்கொண்டமெய்யனுக்கிந்தவினையாம்
மித்தையும்புதிவற்றிடப்புரிவதாலென்னமெத்தசங்கடமாகுமோ
மேனுனிலாமையாய்மந்திரமெடுத்தந்தவிண்ணவர்க்கமுதமீந்த
விமலனுக்கறிவகமெடுத்தமிர்தமீவதெனமிகவுமாயாசமாமோ
காணுருமோபன்றிவடிவெடுத்தன்றுகனகாசுரனைவென்றவனியைக்
காத்துநிலைசெய்தவகைமனைதநிலைசெய்தபயகரமளித்துனதுநிலையை
தேனுருமரவிந்தவாய்மலர்ந்துரைசெயிற்செய்யவாய்முத்துதிருமோ
சிந்தாகுலந்தீருமெந்தாயுடன்வருஞ்செந்தாமரைக்கண்ணனே. ௬௬

ஆதிநரசிங்கமாயசுரனைச்சாபத்தையடன்மார்புபிளவுசெய்தாய்
அஞ்ஞானகருமபந்தத்தைத்பிளந்துநீறாக்கவல்லமையில்லையோ
வேதியகுமாரனுபவதரித்தன்றசூரவேந்தனையடக்கியவனே
வேறுபுரிமனமீதிலடிவைத்தடக்கின்றவிமசாத்தியமாகுமோ
கோதிலாப்பரசுகொடிராமனுய்மதமுறுங்கொற்றவனைவென்றகுருவே
கொடுமைபுரிகாமாதியாறைநீறாக்கினுற்குற்றமேதாவதுண்டோ
தீதிலாவிஜயனுக்குனதுநிசதத்துவந்தெரிவித்தவாசுதேவா
சிந்தாகுலந்தீருமெந்தாயுடன்வருஞ்செந்தாமரைக்கண்ணனே. ௬௭

மண்டலமும்விண்டலமும்வென்றகன்றகண்டிகனிராவணனைமுதலாம
வங்கிசத்தின்வேரைவாங்கியன்பரையாளவந்தபரமாநந்தமே [ரக்கர்
தொண்டனுமென்றனையநாதியாய்த்தொடர்பவந்தொலையவேரைகளைந்
தூயநிஷ்டைகளிலுயர்பிரபத்திநிஷ்டையாலுசுகமீவதென்னமலையோ
அண்டரியசுபகுணத்தைச்சின்னசாமியெனுமடியேனுரைக்கவறியேன்
ஆனாலுமாசையாயோதினேனுனையாலங்கீகரித்தருளுவாய்
திண்டிறற்றேருளனேசீதைமணவாளனேதிவ்யபவ்யகுணாளனே
சிந்தாகுலந்தீருமெந்தாயுடன்வருஞ் செந்தாமரைக்கண்ணனே ௬௮

அரிநாமசங்கீர்த்தனை முற்றிற்று.